கண்டி கட்டுக்கலை ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலயம்

# மகா கும்பாபிஷேகம்

07-09-1988



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



624 Sri Maha Ganapathy

J. B. KHANNA & Co.
10, Devaraja Mudali St
MADRAS-600003.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
ஸ்ரீ செல்வ விநாயகர் துணை

கண்டி கட்டுக்கலை ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயம்

1765  1988

# * சிறப்பு மலர் *

## மகா கும்பாபிஷேகம்


07 - 09 - 1988

மலர் தொகுப்பு

வீ. பா. சு. மணியம் — சிவஞானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆசியுரை வழங்கிய காமகோடி திருவேணி சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

T. S. Sambamurthy Sivachariar
Sri Kalikambal Devasthanam
212, Thambu Chetty Street,
MADRAS - 600 001.
S. INDIA.
Phone: 5 1 0 5 1 6



"SRI - KALIKA"
96, Ramaswamy Street,
MANNADY,
MADRAS - 600 001.
Phone: 5 1 3 9 5 7

உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்
நிலவுலாகிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவோம்

ஸ்ரீ இலங்கை கண்டியில் தமிழ் மன்னர்களால் நிறுவப்பட்ட மிகப் பழமை வாய்ந்த அருள் மிகு செல்வ விநாயகர் ஆலயத்தினை பல லட்ச ரூபாய் மதிப்பில் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பெருமுயற்சியுடன் புதுப்பித்து குடமுழுக்கு நிகழ்த்த இருப்பது குறித்து பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன்.

ஆன்மாக்கள் உய்வித்திடவும், ஒருமித்து அமைதி பெறவும் இறைவன் அருள் பாலித்திடும் திருத் தலங்களே ஆலயங்களாகும். அத்தகைய ஆலய அமைப்பினாலும் இறை வழிபாட்டினாலும் இலங்கை வாழ் மக்கள் யாவரும் இகபர நலன்கள் பெற்று ஒற்றுமையும் மன அமைதியும் பெற்று இன்புற்று வாழ்ந்திட அன்னை காளிகாம்பாளை பிரார்த்திக்கின்றேன்.

அம்பாள் ஆசீர்வாதம்

தி. ஷ. சாம்பமூர்த்தி சிவாச்சாரியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதி உத்தம ஜனுதிபதி

# திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன

அவர்கள் கருத்துரை

## அடிப்படையில் ஒரு ஒற்றுமை

இந்து மக்களுக்கும் பௌத்த மக்களுக்குமிடையில், சமய அடிப்படையிலே ஒரு ஒற்றுமை நிலவுகிறது. இந்த ஒற்றுமைதான் இரு இன மக்களையும் அன்பாலும் பண்பாலும் பிணைத்து வைத்திருக்கின்றது.

இரண்டு சமயத்தைச் சார்ந்தவர்களும் தர்மத்தில் அசையாத நம்பிக்கை கொண்டிருக்கின்றார்கள் அதர்மமான காரியங்களை அவர்கள் அங்கீகரிப்பதில்லை.

பாவ புண்ணியங்களில் இரு சமயத்தவர்களும் ஒரே விதமான அபிப்பிராயம் உடையவர்களே. கர்மபலன் என்பதிலும், மறுபிறவி என்பதிலும் கூட அவர்கள் ஒருமித்த கருத்துடையவர்களே.

ஆசையை அகற்றவேண்டும் என்பது இரு சமயங்களினதும் அடிப்படைக் கோட்பாடு ஆகும். ஆசையே அனர்த்தங்களின் ஆதி வித்து என்பதிலும் அவர்களிடம் வேறுபட்ட கருத்துக் கிடையாது.

இலங்கையிலுள்ள பல பௌத்த விகாரைகளிலும், தேவாலயங்களிலும் இந்து சமயக் கடவுளர்களுக்கு இடமளிக்கப்பட்டுள்ளது. அதே வேளையில் இந்துக்கள் புத்தர் பெருமானை மகா விஷ்ணுவின் திருவவதாரமாக எண்ணி வழிபடுகின்றனர்.

தலதா மாளிகையைச்சுற்றி இந்து தேவாலயங்கள் உள்ளன. பெரஹரா வேளையில் இந்த ஆலயங்களிலிருந்தும் இந்து சமய தெய்வங்கள் பிரகாரமாக எடுத்துச் செல்லப்படுகின்றன.

பண்டைய ஜயவர்த்தனபுரத்தின் நான்கு திசைகளிலும் இந்து தெய்வங்களைக் காவற் கடவுளர்களாக அமைத்திருந்தார்கள் என்பது சரித்திரம் கூறும் உண்மையாகும்.

இலங்கையில் அமைந்துள்ள கதிர்காம ஆலயமானது இரு சமயங்களினதும் ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் மஹா தேவாலயமாகும்.

இரு சமயங்களுக்கிடையிலும் இவ்வாறக இரண்டறக் கலந்த தத்துவங்கள் தேசிய ஒருமைப்பாட்டினை வலியுறுத்தப் பயன்படுகின்றன.

(அதி உத்தம ஜனுதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன அவர்கள்
ஆற்றிய உரையொன்றின் சிறு பகுதி இதுவாகும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*Message from*

*Hon. E. L. Senanayake*

**Speaker - Parliament**

*SRI SELVA VINAYAGAR TEMPLE has been a venerated Shrine from the time of the Sinhala Kings.*

*Dating back to 1765 in the reign of King Keerthi Sri Rajasinghe the Day-Perahera of the Esala Festival began from the Selva Vinayagar Kovil since 1775.*

*This Kovil is venerated not only by the Hindus, but also by Buddhists.*

*I wish to congratulate the administration and Mr. G. Krishnamoorthi who is the Manager of the Trust for the vast improvements done to this Shrine by spending a very large sum of money.*

*I shall be very glad to associate myself with the ceremonies involved on the 7th September 1988.*

*E. L. Senanayake*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# S. Thondaman, M. P.

Minister of Rural Industrial Development

வல்வினைகள் வேரறுத்து அருள் பாலிக்கும் ஸ்ரீ செல்வ விநாயகர் வீற்றிருக்கும் ஆலயம் புனரமைக்கப்பட்டு 07–09–88 அன்று மகா கும்பாபிஷேகம் நடைபெற விநாயகப் பெருமான் அருள்பாலித்திருப்பது அறிந்து பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

எழில் கொஞ்சும் மலையகத்தின் பிரதான நகரமாகிய கண்டி மாநகரிலே, பன்னெடுங்காலமாகத் தமிழ் மக்கள் வாழ்ந்து வருவதைச் ஸ்ரீ செல்வ விநாயகப் பெருமானின் ஆலயத்தின் சரித்திரம் எமக்குத் தெட்டத் தெளிவாக எடுத்தியம்புகின்றது. இவ்வாலயத்தினை 1765ம் ஆண்டில் பெருமை வாய்ந்த மன்னன் கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்ஹ உருவாக்கியதும், மலை நாட்டிலேயே பழம் பெருமை வாய்ந்த இவ்வாலயத்தினை அதன் பின்னர் நாட்டுக்கோட்டையைச் சேர்ந்த நாகநாதர் குடும்பத்தின் வழி வந்த சேர் அருணாசலம் செட்டியார் அவர்கள் பரிபாலித்து வந்ததையும் அறிந்து பெருமிதம் கொள்கிறேன்.

இன்று இனங்களிடையே ஒற்றுமையை நிலைநாட்டுவதில் சைவாலயங்கள் முன்னணியில் திகழ்வது கண்கூடாகும். கதிர்காமத்தில் குன்றிலே வீற்றிருந்து சிங்கள தமிழ் மக்களிடையே பக்தியுணர்வு மூலம் ஒற்றுமை உணர்வை நிலைபெறச் செய்யும் கதிர்காமக் கந்தனைப் போன்று மலை நாட்டிலே, எல்லா இன மக்களிடையேயும் ஒற்றுமை உணர்வை ஓங்கச் செய்து, இந்நாட்டில் அமைதியும் சமாதானமும் நிலைபெறச் செய்ய ஸ்ரீ செல்வ விநாயகப் பெருமானின் அருள் கிட்ட வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

இப்புனருத்தாரணப் பணியில் தம்மை ஈடுபடுத்திய இறையடியார்கள் அனைவருக்கும் விநாயகப்பெருமானின் அருட் கடாட்சம் கிடைக்க எல்லாம் வல்ல ஸ்ரீ செல்வவிநாயகப் பெருமானை இறைஞ்சுகின்றேன்.

சௌ. தொண்டமான்
கிராமிய தொழிற்றுறை அபிவிருத்தி அமைச்சர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையும் மலைசார்ந்த இடமுமான குறிஞ்சி நிலத்தில் கண்டி மாநகரில் எழுந்தருளி வேண்டுவோருக்கு வேண்டுபவன எல்லாம் அள்ளி வழங்கும் ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயம் மிக பழைமை வாய்ந்தது. விநாயகப் பெருமானின் ஆலயம் சரித்திரச் சிறப்பு வாய்ந்தது. சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்பு நிர்மானிக்கப்பட்ட இந்த ஆலயத்தை காலத்துக்குக் காலம் வள்ளல்கள் அள்ளிக் கொடுத்து அழகுற அமைத்து இருக்கிறார்கள்.

வரலாற்று சிறப்பு வாய்ந்த இந்த ஆலயத்தில் மகா கும்பாபிஷேகம் நடைபெற இருப்பதை அறிந்து பட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். திருக்கோயில்களில் தெய்வ வழிபாடும், கலாச்சாரமும், நாகரீகமும் தமிழ் மக்களால் வளர்க்கப்பட்டன பழம் பெருமை வாய்ந்த கோயில் புதுப்பிக்கப்படுவதும், மகா கும்பாபிஷேகம் நடைபெறுவதும் தமிழ் மக்களின் வாழ்வோடு இரண்டறக் கலந்து விட்ட நிகழ்ச்சியாகும்,

அருள்மிகு ஸ்ரீ செல்வ விநாயக ஆலயத்தின் திருப்பணி வேலைகள் அவனருளால் இனிது நடைபெறுவதும், கும்பாபிஷேக ஞாபகார்த்தமாக மலர் வெளியிடுவதும் மன நிறைவு தரும் நிகழ்ச்சியாகும். இந்த புனித புண்ணிய முயற்சிக்கு பொருள் கொடுத்தவர்கள் உடல் உழைப்பு நல்கியவர்கள் ஊக்கமளித்த-வர்கள் அனைவருக்கும் விநாயகப்பெருமானின் திருவருள் கிடைக்க வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்

இங்ஙனம்.

செல்லையா இராசதுரை
பிரதேச அபிவிருத்தி, இந்து சமய
இந்து கலாச்சார, தமிழ் அலுவல்கள அமைச்சர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Message From Hon. Dr. Nissanka Wijeyaratne

## Minister of Justice & Ex D.N.

Kandy is a very ancient city. From earliest times it was the centre of settlements proximate to the mahaweli river along which ran the pilgrim route from the pihiti or rajarata especially during the Polannaruwa period. Later on, in the days of the Kurunagala kings it was a centre of a Sub-Ruler and a defence centre on account of its strategic location encircled by the river and girdled by steep hills.

It continued in value into the Gampola period when elements of the Vijayanagai Hindu kingdom influenced Sinhala Culture and places of worship were established to well - known Hindu Deities at Embekke, Gadaladeniya, Lankatilake, Walahagoda and Dodanwela among others.

In Kandy a Brahmin named Senkhanda had selected a cave, above the site where the present Maligawa was later established, to reside and meditate. It was considered a site blessed by fortunate sings, Near it in due course the shrine to the god Natha or Avalokiteswara, Padmapani or the Maitreya Buddha sacred to the Mahayana Buddhism was established by the Sinhala residents The central stone structure was of stone, which like the Budhist shrine in the present day Adhana Maluwa of the Asgiriya, Achakagiri or walasgal monestry was constructed during the Gampola period and show, In their gedige construction The style and distinct influence of humpi.

During the kotte period Senkadagala Nuvera, as Kandy was termed, was well known and a significant regional Kingdom. When after the unfortunate risitudes of history, Ditawaka rose and Senkadagala fell and kotte was destroyed through Portuguese aggzandisement, A new revival took place in the nation. Konnappu Bandara turned on the Portuguese Army of conquest at Gannoruwa, defeated it completely, captured Kusumasana Devi or Dona Catherina - the lawful heiress to Senkadagala married her and had himself crowned as Wimaladharma Suriya I

He resided in the ancient complex close to the poya Maluwa temple, where tradition had it, the Patra Dhatu of the Buddha was enshrined, and below the Naga Vihara. The palace overlooked the old Bogambara Wewa the waters of which stretched upto the foot of Bahirawakanda and lapped the steps of a shrine popularly worshipped by Hindu and Buddhist subjects alike.

This shrine propitiatory offerings were regularly made. The Sinhala people held that their pleas to appease the awesome power of Bairawa - God of the earth - would be answered while the Hindus Paid their venuation to Shiva the lord of destruction of evil.

This sacred centre now called the Pullayar Kovil has since these early days been entuised in the traditions of adherents of these two Great faiths. Every year, when the great Esala Festival takes place. During July - August and the day Perehera is held, the section of the Perehera sacred to God Kataragama Commences here before

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

proceeding to join the Maligawa Perehera that commences that day from the Adhana Vihara.

In the Pullayar Kovil on this occasion, vast members of Hindu and Budhist congrete to pray for understanding and knowledge to the elephant headed God Ganesha the God of wisdom who is also enshrined here.

Oral tradition holds that the shrine was rebuilt by king Kirthisri Rajasinghe in the eighteenth century but the links of the two streams of devotees both Buddhist and Hindus go back much earlier and only serve to remind us of the greatness of that king respected by both faiths and give hope to all of us for concord and hermony for the future.

This year, when the Kumbabisheham, takes place on the sacred day of Wednesday the 7th of September we remember with gratitude the great benefactors of the place of worship over the last century and to all devotees, both Hindu and Budhist, who lavish their care and attention to it.

We also owe special thankes to Mr. Govindasamy Krishnamoorthy, the present Trustee and a leading Businessman of Kandy, and to all members of the Family, who have helped to bring the Pullayar Kovil to a new height as a loved and great shrine in the Historic city of Senkadagala.

*Nissanka Wijeyaratne*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message From Governor, of the Central Province

It gives me great pleasure to send this message on the occasion of the Maha Kumbabisheham (Consecration) Ceremony of the historic Sri Selva Vinayagar Temple in Kandy to be held on 7th September, 1988 at 7.30 a.m. and also to participate in it.

This Temple which is known as a Ganadevi Temple or as a Pillaiyar Kovil among the Sinhalese has been one established during the reign of King Kirthi Sri Rajasinghe in 1752 and is believed to be one of the oldest Hindu Kovils in the Hill Capital. This was constructed by a wealthy merchant Sri Arunachalam Chettiar whose descendants administer the affairs of the Temple to this day.

Mr M. B. Dassanayake, the well-known Author and Historian confirms the date of the establishment of this Shrine. He also refers to the fact that it was King Kirthi Sri Rajasinghe who decreed that the Hindu Gods too should be taken in procession along with the Sacred Tooth Relic of the Buddha. Since then, this Temple has participated in the Annual Esala Perahera in honour of the Sacred Tooth Relic of the Buddha. It is from this Temple that a section of the Day Perahera proceeds for the Water - cutting Ceremony at Getambe while the other part with the Sacred Relics of the Buddha proceeds to the Adahana Maluwa for the devotees to pay their respects until the section that went to Getambe returns after the Water - Cutting Ceremony.

This Hindu Temple is therefore venerated by both the Buddhists and Hindus alike. It is therefore the main reason why this Hindu Shrine and its Hindu adherents have not suffered the calamities that befell other Shrines and other Hindu adherents in other parts of the Island.

As the Governor of the Central Province I am proud that Sinhala - Tamil unity has remained intact in this venerated Temple and it is an example set to the rest of the people of this Country, It is this spirit that should get into the minds and hearts of all Sri Lankans to whichever, Race, Community or Religion he might belong to.

I wish that this Ceremony in which all sections of the community will take part will be a harbinger of Peace and Harmony which all those who cherish Democracy and all Freedoms are longing for in this Island of ours.

I congratulate all those who have contributed to this most desireable state of affairs.

*E. L. B. HURULLE*
*GOVERNOR, CENTRAL PROVINCE*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உலக அழகையெல்லாம் ஒருங்கே குழைத்துக் கட்டியிருக்கும் கண்டி மாநகரில் கம்பீரமாக எழுந்தருளி திருவருள் பாலித்துவரும் கட்டுக்கலை ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயம் வரலாற்றுப் புகழ்மிக்கது. தேசிய நீரோட்டத்தின் ஒற்றுமைக்கு புனித சின்னமாகும்.

வீரமிகு கண்டி மாமன்னர்களால், சிங்கள மக்களாலும் போற்றிப்புகழப்பட்டு வருகின்ற இந்துக்களின் இதயமான ஸ்ரீ செல்வ விநாயகர் சந்நிதி நமது முன்னோர்கள் நமக்காக விட்டுச்சென்ற அருங்கொடை!

இதனைக்கட்டிக்காப்பது நமது இன்றைய கடமை! நாளைய இளையதலைமுறையினர்களின் கடப்பாடு!

பிள்ளையார் வழிபாடு பழமைமிக்கது! விநாயகர் சிவ பாரம்பரியத்தைச் சேர்ந்தவர்! என்றாலும், விஷ்ணு சந்நிதிகளிலும்கூட வீற்றிருப்பவர் பிள்ளையார்! அந்தளவுக்கு வைணவர்களும், சமணர்களும் வழிபடுகின்றனர்.

பிள்ளையார் ஏழைகளின் தலைவன்! மண், சாணம், மஞ்சள், வீபூதி இவைகளால் பிள்ளையார் பிடித்து வழிபடலாம். எவ்வாறு வழிபட்டாலும் தனக்கு நாயகன் இல்லாத அவரை ''வி'' நாயகன் என்கிறோம்.

தமிழகத்தில் மாத்திரமல்ல, பாரதநாட்டில் நாடளாவிய ரீதியிலும், ஜப்பான், மெக்சிக்கோ, மலேசியா, மணிலா, வியட்நாம் போன்ற இன்னோரன்ன நாடுகளில் எல்லாம் விநாயகப்பெருமானின் விக்கிரகங்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக காஞ்சிக் காமகோடி பீடாதிபதி சங்கராச்சாரி கூறுகின்றார்.

இலங்கையில் பிள்ளையார் வழிபாடு, ஒரு தேசிய ஒருமைப்பாட்டை உருவாக்குகின்றது என்பது மாத்திரமல்ல, உலக மக்களின் பண்பாட்டு பாரம்பரியமும் உறவுநெறியும் இழையோடியிருப்பதை அவதானிக்கமுடிகின்றது.

தேசிய ஐக்கியத்திற்கும் அமைதிக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள வேதனைமிகு இவ்வேளையில், கண்டி வாழ் பெருங்குடிமக்களும், இன்னும் பிற அடியார்களும் பெருமனதுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்மிகு ஸ்ரீ செல்வ விநாயகர் கோவில் மகா கும்பாபிஷேகத்தை சிறப்பாக நடாத்த எடுத்துள்ள பெருமுயற்சி பாராட்டத்தக்கது!

குறிப்பாக ஆலய அறங்காவலர் திரு. G. கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. பாலசுப்பிரமணியம் மற்றும் பிரமுகர்கள் ஆகியோர் இக்கும்பாபிஷேக புண்ணிய கைங்கரியத்திற்கு ஆற்றிவரும் அளப்பரிய பங்கினை வியந்துபாராட்டப்பட வேண்டும்!

இதுபோன்ற இறைவழி பணிகளில் நாம் ஒருங்கிணைந்து ஈடுபடுவதன் மூலமே தமிழும், சைவமும் தழைத்தோங்க முடியும்! அதுவே பாரம்பரிய கலாசாரத்திற்குக் கிடைக்கக்கூடிய மாபெரும் கொடையாகும். இந்த ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடந்தேறி, காலனும் கைதொழும் கணபதியின் கருணைத் திருவருளைப் பெற்றேக கண்டி வாழ் மக்களுக்கு எனது இதயபூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**எம். எஸ். செல்லச்சாமி**
இ. தொ. கா. பொதுக்காரியதரிசி,
சுகாதாரம், பொருளாதார கட்டமைப்பு அமைச்சர்
–மேல் மாகாணசபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message From the Assistant High Commissioner for India Kandy



I am very happy that Sri Selva Vinayagar Temple, Kandy is having its Maha Kumbabizagam on Wednesday, Sept. 7, 1988. This sacred event is a momentous one in the history of this temple which dates back to 1752. It is a matter of great satisfaction that the devotees who regulary visit this temple include not only Hindus but also Sinhalese. Sri Selva Vinayagar Temple, Kandy also participates in a big way in the Esala Perahera which is the hill capital's biggest religio - cultural event. Esala Day Perahera starts from Sri Selva Vinayagar Temple. The temple has, therefore, always, played a significant role in promoting religious, cultural and ethnic harmony. May the Maha Kumbabizagam bring peace harmony and ethnic reconciliation to Sri Lanka.

R. P. Dua

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இராம. வீரப்பன் செட்டியார்
A. R. L. S. V. N. R. TRUST
A. R. L. HOUSE
தேவ கோட்டை,
தமிழ்நாடு.

# திருப்பணி செய்தால்
# பிறவிப்பிணி தீர்ந்திடுமே

இலங்கையின் வரலாற்றில், குடியேற்றக் காலத்திற்குபின் எமது பரம்பரையினரே நாடெங்கும் ஆலயம் அமைத்து அறநிலை செய்தார்கள் என்பதை உலகம் அறிந்ததே. அந்த வரிசையில் உருவான ஆலயத்தில் ஒன்றே கண்டி கட்டுக்கலை ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயம். இன்று கண்டி நகரில் இந்து மக்களின் மான்பை எடுத்தியம்பும் வண்ணம் இவ்வாலயம் உயர்ந்து நிற்கின்றது.

எங்களிற்கு பின் இவ்வாலயத்தை நிர்வகிக்க சிலருக்கு கொடுத்த போதிலும் நாங்கள் எதிர் பார்க்காத விதத்தில், யாரும் துணிந்து செய்ய முடியாத மகா கும்பாபிஷேகம் ஒன்றை, பாரிய செலவில் ஊர், மக்களின் அரவணைப்போடும், திரு. G. கிருஷ்ணமூர்த்தி செய்ய முன்வந்து, எங்களிடம் சொன்னபொழுது நாங்கள் செய்யக்கூடிய காரியமல்ல என்று சொல்லி பின்பும், துணிந்து இவ்வளவு விமரிசையாக செய்வதை அறிந்து மிக மிக மகிழ்ந்தேன்.

மன்னர்கட்டிய, ஆலயங்கள், கூட இன்று செயல்பட முடியாத நிலையிலிருக்கும்போது கண்டி கட்டுக்கலை ஸ்ரீ செல்வவிநாயகப் பெருமானுக்கு நடக்கும் மகா கும்பாபிஷேகத்தை யிட்டு, அகமகிழ்ந்து எல்லாம் வல்ல எம்பெருமான் இந்துக்கள் அனைவரையும் ஒருங்கிணைந்து ஒற்றுமையாக வாழ வழிவகுப்பானாக.

சுபம்

## "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிழ்வோடு ஒரு கோரிக்கை!



கோபுர தரிசனம் கோடி புண்ணியம், பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு முறை ஆலயங்களை கும்பாபிஷேகம் செய்ய வேண்டும் என்பதுதான் நமது ஆரம்பக் கோட்பாடு, அவ்வாறு செய்வதன் மூலமே, ஆலயத்தின் புனிதத்தன்மை மேன்மை பெறுகின்றது மூலமூர்த்தியின் அருட்சக்தி பெறுகிறது. அத்தகைய ஆலயத்தை தரிசித்து வழிபடும் மெய் அடியார்களின் வினை திருகிறது. கேட்பார்க்கு கேட்டவரம் கிடைக்கிறது. மெய் அடியா. களின் வினை தீருகிறது என்பதை எல்லாம் மகான்கள் மூலம் கேட்டதில் இருந்து என் நெஞ்சம் நெகிழ்ந்து போன நாடகள் உண்டு. வேதனையோடு கண்டி அருள்மிகு செல்வ விநாயகர் ஆலயத்தில் தரிசனம் செய்து வலம் வந்த நேரங்கள் உண்டு, ஆம் அறங்காவலராக இந்த ஆலயத்தின் பொறுப்பை ஏற்ற பின்னர், குடமுழுக்கு விழாவினை செய்து முடிக்க வேண்டும் என்று எண்ணியபோதெல்லாம், விஜயநகரப் பேரரசன் கிருஷ்ண தேவ ராயர் வழிவந்த அச்சுத தேவராயர் சுமார் முன்னூறு ஆண்டுகளுக்கு மூன் அடித்தள மிட்டு முடிவு பெறுமல் நின்று விட்ட அக்கோபுரம் என் நினைவுக்கு வந்தது

முடி மன்னரால் முடிவுருத அக்கோபுரம் அடியார் ஒருவரால் இன்று ராஜகோபுரமாக வானுயர்ந்து நிற்கும் காட்சி எனக்கு உறுதுணையாக இருக்கின்றது சயன் திருக் கோலத்தில் ஸ்ரீ அரங்க நாதரை கண்டியில் தரிசிக்கும் போதெல்லாம் அந்த ஸ்ரீ ரங்க நாதர்மேல் ஸ்ரீ அஹோபில மடம் ஸ்ரீமத் அழகிய சிங்கர்ஜீ சுவாமிகள் அன்பு அவரை இயக்க அந்த அன்பு இன்று வானுயர உயர்ந்த ராஜ கோபுரமாக அகிலத்தார் வணங்கும வண்ணம் ஆன்மிக பொலிவோடு மிளிர்கிறது என்பதை எண்ணி வியந்து அந்த மகானையும் தரிசி்து அருள் ஆசி பெறும் பாக்கியம் கிடைத்தது.

ஸ்ரீ ரங்கநாத பெருமானின் திருவருற்கடாச்சம் கிடைத்த காஞ்சி பெரியவரின் அருள் ஆசியுடனும் அவன் திருவருளுடனும் அவன் பணிகளை ஆரம்பித்தேன். இன்று எல்லோரும் வியக்கும் வண்ணம் இந்த குடமுழுக்கு விழாவினை மிகச் சிறப்பாக நடத்தும் பெரிய வாய்ப்பு கிடைத்தது. எனக்கு மிகுந்த ஆத்ம திருப்தியை தந்துள்ளது. திருப்பணியை துவங்கிய நாள் முதல் பூபாளம் பாடும் நேரமெல்லாம் விழித்து இருந்து எடுத்த காரியத்தை முடிக்க வேண்டும் என்ற பலத்தை சிந்தனையோடு அல்லும் பகலும் பாடுபட்ட பெருந்தகைகளை அன்பு உள்ளங்களை நெஞ்சுருக வாழ்த்துகின்றேன். அவர்களுக்கெல்லாம் இறையருளும் திருவரமும் கிடைக்க எல்லாம் வல்ல எம்பெருமானை வேண்டுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித சக்தியோடு தெய்வ சக்தியும் கிடைத்தமையால் திருப்பணியை வெற்றிகரமாக் முடித்து இருக்கின்றோம். இந்துக்களாகிய நாம் ஒவ்வொருவரும் நமது ஆலய வளர்ச்சியில் பங்கு கொள்வோம்.

தாங்களாள் ஆனதை செய்யுங்கள் !

தூற்றுதலை குறைத்துக் கொள்ளுங்கள் !

இது என் பகவானின் வேண்டுகோள் !

ஆலயங்கள் சிறக்க வீடும் நமது நாடும் சிறக்கும் !

நாளை என்று நாட்களை கடத்தாதீர்கள். இன்றே இப்பொழுதே தங்களுடைய காலத்தில் ஒரு சிறு பகுதியை ஆலய பணிக்கும் பிரார்த்தனைக்கும் அர்ப்பணியுங்கள் என்று பணிவோடு ஒரு கோரிக்கை விடுகின்றேன்.


இந்த புனித பணிகளின் மூலம் நீங்கள் அளவில்லாத நற்பலனை அனுபவிப்பதுடன் நமது சிறுர்களுக்கு ஆன்மிகத்தை போதியுங்கள். ஆலயத்தின் அவசியத்தை விளக்குங்கள்! இதுதான் நாம் நமது வருங்கால சந்ததியினருக்கு விட்டுச்செல்லும் பெரும் பொக்கிஷம்.

எனது பணிவான வணக்கங்கள்

கோ. கிருஷ்ணமூர்த்தி
(நிர்வாகி)

ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயம்
கண்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈழமா நகர் என்னும் வீரமா நகரின் வெற்றித் திலகமாக விளங்குவது மஞ்சுகள் தவழ்ந்து கொஞ்சி விளையாடும் மலையகத் திருநகர் கண்டி நகராகும். உலகப் பெருமதங்கள் நான்கும் உறவு கொள்ளும் இந்நகரில் இந்துக்களின் எழிலார்ந்த திருக்கோயிலாக விளங்கி ஈடும் எடுப்பும் கொண்டு மிடுக்கோடு விளங்குவது **கண்டி கட்டுக்கலை** அருள்மிகு ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலயம் என்பதை நாம் அறிவோம்.

பல தசாப்தங்களாக இவ்வாலயத்தில் திருப்பணி வேலைகளும் கும்பாபிஷேகமும் நடைபெறாதிருந்த நிலையைக் கண்டு - வருந்திக் கவலையுற்ற மேற்படி ஆலய நிர்வாகியான அன்பர் திரு. கோ. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் விடாமுயற்சியாலும் அயரா உழைப்பாலும் 1986ம் ஆண்டு திருப்பணி புனருத்தாரன வேலையை ஸ்ரீ செல்வ விநாயகர் அருளால் தொடங்கி இன்று மகா கும்பாபிஷேகம் நடைபெறுவதை எண்ணி எண்ணி இரும்பூதெய்கிறோம், புலங்காகிதமடைகிறோம்.

ஆலயத்தின் கிரீடம் போல் அமைந்து வனப்பும் வண்ணமும் சேர்ந்த சிற்பங்களால் மிளிரும் கோபுரமும் இறைவனின் அருமை பெருமைகளையும் திருவிளையாடல்களையும் விளக்கும் மண்டபங்களின் எழிலும் வினைதீர்க்கும் விநாயகப் பெருமானின் கோயில் கொண்டருளி இருக்கும் திருத்தலத்தின் மகிமையை எடுத்துக்காட்டி நிற்கின்றன. வான்மாரிபோல் அருள்மாரி வழங்கிடும் அருள்மிகு செல்வ விநாயகருக்கு குடமுழுக்காட்டும் இந்நன்நாளில் கற்றோரும் மற்றோரும் சைவரும் ஏனையோரும் பல்வளமும் நல்வளமும் பெற்றுய்ய ஐங்கரன் அருள் பாலிப்பாராக.

**“கண்ணுத லுடையதோர் களிற்று மாமுகப்**
**பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்”**

**வீ. பாலசுப்பிரமணியம்**
*தலைவர்*
இந்து இளைஞர் மன்றம், கண்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்
26 - ஆவது குருமகாசந்நிதானம்

# ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

தருமபுரம்
மயிலாடுதுறை (அஞ்சல்) 609 001.

''ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே''

விநாயகர் குழந்தைகள் முதல் பெரியோர்வரை அனைவராலும் விரும்பி வழிபடப் பெறும் தெய்வம் ஆவார். சைவ சமயிகள் எந்தச் செயலைத் தொடங்கினாலும் அச்செயல் இடையூறின்றி நிகழ விநாயகரை வழிபடுவதை நியமமாகக் கொண்டுள்ளனர். சிவபிரான் அப்பெருமையை அவருக்கு அளித்துள்ளதைப் புராணங்கள் தெரிவிக்கின்றன. சிவபிரான் அடியார்களின் இடர்களைக் களைவதற்கென்றே விநாயகரைத் தோற்றுவித்தருளியதைத் திருஞானசம்பந்தர் வலிவலம் தேவாரத்தில்

பிடியதன் னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வளி வலம்உறை இறையே

எனக் குறிப்பிட்டருள்கிறார்.

விநாயகர் திருவுருவம் ஓம் என்னும் பிரணவத்தின் வடிவமாயமைந்து விளங்குவது. விநாயகரது முகம் பிரணவத்தை உணர்த்தும் ஐந்துகரங்கள் அவர் ஐந்தொழில் செய்வதைக் குறிக்கும். மூன்று விழிகள் சூரியன், சந்திரன், அக்னிகளை உணர்த்தும். இருசெவிகள் ஆன்மாக்களுக்கு உண்டாகும் பலவாதனைகளை அகற்றுவதைத் தெரிவிக்கும். பெருவயிறு அவர் எல்லா உலகங்களையும் தனக்குள் அடக்கிக் காப்பதை அறிவிக்கும்.

இத்தகைய பல தத்துவங்களை உணர்த்தும் விநாயகர் தெய்வங்களில் மிக எளிதில் அருள்புரிபவராக ஆறு, குளம், வீதி முதலான பல இடங்களிலும் கோயில் கொண்டு கருணை பொழிகின்றார். இலங்கையில் தமிழ் மக்கள் வாழும் கண்டியில் செல்வ விநாயகர் திருப்பெயரோடு எழுந்தருளியிருந்து தன்னை வழிபடும் அன்பர்கட்கு அருள் புரிந்து வருகிறார்.

இவரது திருக்கோயிலைப் பெரும்பொருட்செலவில் அங்குள்ள மக்கள் திருப்பணிகள் செய்வித்து மகா கும்பாபிஷேகம் நடத்த முற்பட்டிருப்பதை அறிந்து மகிழ்கிறோம்.

மகா கும்பாபிஷேக விழா இனிது நிகழவும் இலங்கைவாழ் தமிழ் மக்கள் எல்லா நலங்களும் பெற்று இன்புற்று வாழவும் விழாமலர் நன்கினிது வெளிவரவும் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

[illegible]

[illegible]

# [illegible]

[illegible]

[illegible] 609 001.

[illegible]

பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக்குருக்கள்
*(பிரதிஷ்டா சிரோமணி)*

நவாலி அஸ்டகிரி
கந்தசாமி தேவஸ்தானம்,
மானிப்பாய்.

# ஆசிச் செய்தி (மலருக்கு)

கண்டி மாநகர் ஸ்ரீ விநாயகர் மீனாஷி சுந்தரரேசப் பெருமாள் ஸ்ரீ ஸ்கந்தர் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கு மகா கும்பாபிஷேகப் பெரும் சாந்தி விழா நடை பெறுகிறது. இதை ஒட்டி ஒரு சிறப்பு மலர் வெளியிட இருப்பது மிகவும் சிறப்பானதும் இறை வழிபாடு சமயப்பற்று பக்தி என்பவற்றையும் கிரியா தத்துவங்களையும் பல பேரறிஞர்களின் கட்டுரைகளையும் பெரியார்கள் ஆசியையும் முற்கொண்டு வெளி வருகிறது. எனவே அண்டங் கடந்த பொருள் அளவிலதோர் ஆனந்த வெள்ளப் பொருளான இறைவன் இறைவி துணைபுரிய ஷி கும்பாபிஷேகப் பொலிவு பெறும் இம் மலர் எல்லா மக்கள் இதயங்களிலும் கிரகங்களிலும் வாடாத மலராக விளங்குவதுடன் மக்களுக்கு நல்லுணர்வு தர்மம் சாந்தி பொறுமை பக்தி என்னும் பணிவு பெற வேண்டி ஆசி கூறுகிறேன்.

இங்ஙனம்
கும்பாபிஷேக பிரதமகுரு
**பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக்குருக்கள்**
*பிரதிஷ்டா சிரோமணி*

சுவானுபூதி
கிரியாகிரமஜோதி
சிவாச்சார்ய சக்கரவர்த்தி
நவாலியூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



OM SRI SKANDASRAMAM

SALEM - 636 140

**சேலம் ஓம் ஸ்ரீஸ்கந்தாஸ்ரமம்**

ஸ்ரீஸ்ரீஸத்குரு சாந்தானந்த ஸ்வாமிகளவர்களின்

## அருளாசியுரை

சொற்கோவும் தோணிபுரத் தோன்றலும் நம் சுந்தரனும்
சிற்கோல வாதவூர்த் தேசிகனும் - முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே மாமறை நூல் தானெங்கே
எந்தை பிரான் ஐந்தெழுத் தெங்கே.

சைவ சமயாசாரியர் நால்வர் பற்றிய பாடல் இது. இதன் முழுப் பொருளும்அறிந்தோர் நகரத்தார் சமூகத்தினரே என்றால் மிகையாகாது. சமயப் பற்றுடன் வெண்ணீறு பூசி, அக்க மாலைகளுடன் நகரத்தார் பூஜைகளில் பங்கு கொள்ளும் வேளைகளில் சிவப்பழமாகவே தோற்றமளிப்பர்

மன்னர்களுக்குப் பிறகு, தேவாரப் பாடல்களில் ஈடுபாடு கொண்ட நகரத்தார் முழு மூச்சுடன் கோவில் திருப்பணிகளில் முன்னின்று செயலாற்றிய காலம் உண்டு. கோவில்களின் புனருத்தாரணமே ஓர் கால கட்டத்தில் நகரத்தார் கையில் இருந்து வந்தது எனும் உண்மையை மறுப்பதற்கில்லை.

அந்த வழியில் இன்று இலங்கை – கண்டியில் ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயம் நகரத்தார் சமூகத்தைச் சேர்ந்த தேவகோட்டை இராமநாதன், வீரப்பச் செட்டியார் போன்ற பெருந்தகை, தமிழ் மக்களின் நன்கொடை ஒத்துழைப்புடன் 07–09–1988 புதன் கிழமையன்று குடமுழுக்குக்கு முன்னின்று நடத்த யிருப்பது மிகவும் பாராட்டுக்குரிய விஷய மன்றோ. இன்றுள்ள சூழ் நிலையில்,

அவனை அறியா அமரரும் இல்லை
அவனன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை
அவனன்றி ஐவரால் ஆவதொன்றில்லை
அவனன்றி ஊர்புகு மாறு அறியேனே

எனும் பாடலை நினைந்து ஸ்ரீ மீனாக்ஷியும் – ஸ்ரீ சோமாஸ்கந்தரும் – ஸ்ரீ செல்வ விநாயகரும் கடாக்ஷித்தருள வெகு சிறப்பாக குடமுழுக்கு நடைபெற வேண்டுமென அனைவரும் துதிப்போமாக.

ஸ்ரீமத் ஸத்குரு சாந்தானந்த
ஸ்வாமிகளவர்கள் ஆக்ஞைப்படி ரத்னம் ஐயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Srimath Swami Ramadasar**
SRI DEVI UPASAGAR

*Managing Trustee:*
S. K. D. J. Higher Secondary School
Super Power Trust
Swami Natesanar Madam
Swami Natesanar Niketanam

THIRUVERKADU
MADRAS - 600 077
Phone: 69630

*Office:*
42, Shunmugarayan St.,
MADRAS - 600 001.
Phone: 511518 & 514542

பேரன்புடையீர்!

இலங்காபுரியில் கண்டி மாநகரில் அமைந்துள்ள அருள்மிகு செல்வ விநாயகர் திருக்கோயிலின் குடமுழுக்கு விழா 07-09-1988 புதன்கிழமை ஆவணி 22 அன்று சிறப்பாக நடைபெற இருப்பது கண்டு மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

சிவபெருமான் முழுமுதற் கடவுள் எங்கும் நிறைந்துள்ளான். நாம் இறை அருள் பெற நமது முன்னோர்கள் திருக்கோயில்களைக் க்ட்டி அவற்றில் தெய்வத்தின் பல பேதங்களின் மூர்த்திகளின் அமைத்து, நாம் விதிப்படி வழிப்பட்டு சிவணருளை எளிதில் பெற உதவியுள்ளார்கள்.

விநாயகர் சிவபெருமானின் மூத்த திருமகனாராவார். திருமுறைகளில் இவரை மூத்த பிள்ளையார் என்று வணங்குவது மரபு

''பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே''
(திருஞானசம்பந்தர்)

விநாயகப் பெருமான் பிரணவ சொரூபி. விநாயகர் என்றால் தனக்குமேல் ஒரு தலைவர் இல்லதாவர் என்பது பொருள். எல்லாம் வல்ல பரம்பொருளாகிய கடவுளிடமிருந்து முதலாவது உண்டாகிய படைப்பு ''ஓம்'' எனும் பிரணவ நாதமேயாகும். அந்த ஓம் என்னும் ஒலியின் வரிவடிவமே விநாயகரின் திருவுருவமாம். பிரணவ ஒலி எல்லாவற்றிற்கும் முதலானது என்பதால் விநாயகரும் முதலாவதாகப் பூஜிக்கப்படுகின்றார்.

சரித்திர வரலாறு பெற்றதும், அருள் வாய்ந்ததுமாகிய ஸ்ரீ செல்வ விநாயகர் திருக்கோயிலின் புனறுத்தாரணத்தை தாங்கள் அறக்கட்டளை சார்பில் மேற்கொண்டு திருக்கோயில் மேலும் மூர்த்திகரம் பெற்று சைவாகம நெறியில் கும்பாபிஷேகம் 07-09 88 சிறப்பாக நடைபெறவும், தன்னை வழிபட வந்தோர்களை வாழவைக்கவும், இலங்காபுரியில் அமைதிநிலை ஏற்பட்டு மக்கள் சுபீட்சத்துடன் வாழவும் தாங்கள், தங்கள் குழுவினர் பொருட்பேற்று நடத்திவரும் நற்பணி பெருமுயற்சிக்கு எல்லாம் வல்ல பராசக்தி ஸ்ரீ கருமாரியம்மனின் அருள் பாலிக்க பிரார்த்திக்கின்றேன்.

திருக்கோயில் திருப்பணியில் முன்னின்று ஈடுபடுவோர், ஊக்குவிப்போர், நிதிவழங்குவோர், உடல் உழைப்பை நல்குவோர், அனைவரும் நடத்தற்கரியதாம் இறை அருள் பெற்று உய்வர். வாழ்க தங்களது சிவத்தொண்டு, வளர்க தங்கள் அளப்பரிய நன்மணம். இத்திருப்பணியில் ஈடுபட்டுள்ள தங்களுக்கும் மற்றும் யாவருக்கும் அருள்மிகு தேவி கருமாரியம்மன் நல்லாசிகள் வழங்க பிரார்த்திக்கின்றேன்.

ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்சக்தி

இங்ஙனம்
அன்புள்ள,
ஶ்ரீ. எஸ். இராமதாசர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்புடையீர்,

அருளாசி,

தமிழின மன்னர்களால் சுமார் 223 ஆண்டுகளுக்கு முன்பு நிர்மானிக்கப்பட்ட அருள்மிகு செல்வ விநாயகர் திருக்கோயில் ஒரு நூற்ருண்டு காலமாக வழிவழியாக செட்டி நாடு நகரத்தார் சமூகத்தினரால் சிறப்புடன் நிர்வகிக் கப்பட்டு தற்பொழுது சுமார் ரூ. 35 லட்சம் மதிப்பீட்டில் திருப்பணி நிறைவு செய்து திருக்குட நன்னீராட்டுப் பெரு விழா 07 - 09 - 88ல் நடைபெறவுள்ளதனை அறிந்து மகிழ்வுறுகிறேன்.

இத்திருப்பணியை தன் அயராத முயற்சியினுல் நிறைவு செய்த தேவகோட்டை இராமநாதன் செட்டியார், வீரப்பன் செட்டியார் அவர்களைப் பாராட்டுவதில் மகிழ்வுறுகிறேன்.

விழா இனிது நிறைவுறவும், திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா மலர் சிறப்புற அமைந்திடவும் எல்லாம் வல்ல மூவிரு முகத்தோனின் மூத்தவன் ஆனை முகத்தோனை இறைஞ்சி வாழ்த்தும்

பாலமுருகனடிமை
29 - 07 - 1988

"அறமும் மெய்ம்மையும் வெல்லுதல் விழைவு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# MYLAI GURUJI

## Sundara Ram Swamiji - Gurudev Dharma Sthabanam

### Thangal Mouna Guru Ashramam

JAYARAM VILAS,
235, R. K. MUTT ROAD,
MYLAPORE, MADRAS - 600 004.

இந்து மதத்தின் அற்புத தெய்வங்களின் கருணைகடாட்சம் இந்த கலி காலத்திலே எத்தனையோ விதமாக பற்பல கோடி மக்களுக்கு சத்திய சாட்சி சொருபமாக அருள் பாலித்து கொண்டிருக்கிறது. அதன் எடுத்துக்காட்டாக பார்க்கப்போனால் இலங்கையிலே கண்டி மா நகரத்திலே 1764ம் வருடத்தில் பற்பல பக்த கோடிகளால் (இராமநாதபுரம் ஜில்லா) இந்தியாவிலிருந்து சென்று தம்மையே அர்ப்பணித்தவண்ணம் தெய்வ வழிபாடுகளை சிறப்பு மிக்க அளவிலே செய்துள்ளார்கள் என்று தற்சமயம் வந்துள்ள விபரங்களிலிருந்து தெளிவாக புரிகின்றது.

இதற்கெல்லாம் காரணம் இந்து வழிபாட்டின்படி சத்தியம் தவறாத வண்ணம், நேர்மை குன்றாத அளவிலே சத்திய சமரசத்தை உள்ளுணர்வாகக் கொண்டு, எச்செயலும் ஆண்டவன் செயலென்று கருதும் வகையில், அக்காலத்திலும் சரி, இக்காலத்திலும் சரி பக்த கோடிகள் அரும்பாடு பட்டதன் பலன்தான்.

இதன் எடுத்துக் காட்டாக பார்க்கப்போனால் இந்த கண்டி க்ஷேத்திரத்திலே விநாயகத்திருக் கோயில் கும்பாபிஷேகம் இக்காலத்தில் நடப்பது செல்வத்தின் மகிமை அல்ல. ஆனால் சத்தியமான பக்தியின் மகிமைதான்.

யாதோ ஒரு சாதாரணக்கல் என்று கருதி அத்திருக்குளத்தின் அருகே உள்ள கல்லின் மீது அழுக்குகளை துவைத்த கல், இன்று இக்காலத்தில் அதுவும் நீயா நானா என்ற மனப்பான்மை உள்ள நேரத்திலே பக்தர்களுடைய உள்ளத்தில் உள்ள அழுக்கை போக்கவே, ஓங்காரமூர்த்தி எழுந்து அருளி எல்லோரும் வாழ நலமுடன் என்ற நோக்கத்துடனே அருள் பாலிக்க இருக்கின்றார் என்று இந்த கும்பாபிஷேகத்தின் மூலமாக இந்து மதத்தின் ஸ்லாக்கியமான செயலை எடுத்துக்காட்டாக ஆண்டவன் திட்டமிட்டு இருக்கின்றார்.

ஆகையால் தெய்வீகம் நல்ல விதமாக எல்லோருக்குமே அருள் பாலிக்கட்டும் சுத்த சத்திய சமரசம் நல்ல நேர்மையுடன் எல்லோருக்குமே செயல் படட்டும். நல்லதேசர் மனசாட்சி எல்லோர் உள்ளத்திலும் இருந்து பிறர் வாழ நாம் வாழ என்ற செயலாற்றும் நிந்தனையை செயல் படுத்தவேண்டும் என்று அடியேனின் குரு கிருபா கடாட்சமாகிய வள்ளிமலை மௌனகுருவின் திருப்பாதங்களை வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

முருகா

''வேலை வணங்குவதே வேலை''



## கிருபானந்தவாரி

107, சிங்கண்ண செட்டித் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை - 600 002

தொலைபேசி: 565666

# துதி

நேரிசை அறுசீர் ஆசிரியப்பா

வளமிகும் இலங்கை கண்டி
வாழ்க பதியே போற்றி
அளவிலா நலங்கள் நல்கும்
ஆனைமா முகனே போற்றி
உளமகிழ்ந் தேந்தும் அன்பர்
ஓங்கிட அருள்வாய் போற்றி
தளர்வரக் காப்பாய் ஞானத்
தந்தியே போற்றி போற்றி

அன்பர் கிருபானந்தவாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

பருத்தித்துறை வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம், இலங்கை

## வழங்கிய ஆசியுரை

" மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம் "

இலங்கை மாதாவின் இருதய ஸ்தானமாக விளங்கும் எழில்மிகு கண்டி மா நகரில் கோயில் கொண்டு அடியார்களுக்கு அருள் பாலிக்கும் ஸ்ரீ செல்வ விநாயகப் பெருமானுக்கு **07–09–1988** அன்று ஜீரணோத்த்ர மகா கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு பேருவகை அடைகின்றோம்.

அந்தக் கும்பாபிஷேகத்தையிட்டுச் சிறப்பு மலரொன்று வெளியிடுவது மிகச் சிறந்த பணியாகும். இம்மலர் விநாயகப் பெருமான் திருவடித் தாமரைக்கு அர்ப்பண மாகும் சிறப்பு மலராகும். பக்தி மணம் கமழும் சிறப்பு மலராக, சிவானந்தத்தேன் சொரியும் அன்பு மலராகத் திகழ சங்கத் தமிழ் மூன்றுந்தந்தருளும் செல்வ விநாயகப் பெருமான் திருவடிகளை வாழ்த்துகின்றோம்.

விநாயகப் பெருமானைத் தப்பாமல் பூக்கொண்டு சாரு மக்களுக்கு வாக்கு வன்மையும், நல்ல மனமும் மாமலராள் நோக்கும் நுடங்காத மேனியும் உண்டு. விநாயகப் பெருமான் வினையை வேரறுக்கவல்லவன். விரும்பித்தொழும் அடியார்கள் வினைகளையெல்லாம் பூண்டோடறுத்துப் பேரருள் புரிபவன். மூலப் பொருளாக உலகுக்கெல்லாம் முழுமுதற் தெய்வமாகத் திகழ்பவன். ஆகவே செல்வ விநாயகப் பெருமானின் மகா கும்பாபிஷேகம் சீரோடும், சிறப்போடும் நிறைவெய்த அப்பெருமானின் அருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

இத் திருப்பணித் தொண்டிலும், மலர் வெளியீட்டிலும் தொண்டாற்றிய நிர்வாக சபையார், தொண்டர்கள் யாவருக்கும் நல்ல வாக்கும், நல்ல மனமும், மாமலராள் நோக்கும் உண்டாக ஸ்ரீ செல்வ விநாயகப் பெருமானை வேண்டி நல்லாசி கூறுகின்றோம்.

''மாதவர் மடங்களாதி வரதன் மந்திரங்களாதி
நாதமாமிலங்கமாதி நளின புட் கரணியாதி
சேதமுற்றிடின்முன் போலச் செய்கின்றோர்க் குறும் பலன்தான்
ஓது முன் செய்தோர் தம்மில்லாயிரங்குணித மோங்கும்''

பெரிய தவத்தோர் இருக்கின்ற மடங்கள் முதலானவைகளும், கடவுளுடைய கோயில் முதலானவைகளும், நாதமாகிய இலிங்கம் முதலானவைகளும், தாமரையையுடைய குளம் முதலானவைகளும் பழுதடைந்தால் அவைகளை முன்போலச் செய்தவர்களுக்கு உண்டாகும் புண்ணியமானது சொல்லப்பட்ட முன்னவைகளைச் செய்தவர்களுக்கு உண்டானதிலும் ஆயிரம் மடங்கு அதிகமாகும் என்பது சிவ புண்ணியத் தெளிவு.

ஸ்ரீலஸ்ரீ. குருமஹா சந்நிதானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேரன்புடையீர்,

தமிழர் சிங்களர் இணைந்து வழிபடும் புராதன ஆலயமான இது தர்மகர்த்தா தேவகோட்டை இராமநாதன் வீரப்பசெட்டியார் அவர்களின் பெருமுயற்சி எடுத்துக் கொண்டு இலங்கை கண்டியில் தமிழ் மன்னர்களால் நிர்மாணிக்கப்பட்ட ஸ்ரீ செல்வ விநாயகர் கோயிலை அரும்பாடுபட்டு புதுப்பித்து இதனை குடமுழுக்குக்கு தயாராக்கியுள்ளார்கள்.

அன்னாரும், அவரைச் சார்ந்தோர்களும், இக்கோயிலின் திருப்பணிக்கு பொருளுதவி செய்தவர்களும், உழைப்பாளிகளும், ஸ்ரீ செல்வ விநாயகரின் அருளுக்கு பாத்திரமாவார்களாக.

இக்குட முழுக்கு வரும் 07-09-88 அன்று மிகவும் சிறப்புடன் நடைபெற்று மக்கள் நல்வாழ்வு பெற இந்த பௌர்ணமி நாளில் என் அன்பு ஆசிகள்.

இக்கோயில் குடமுழுக்கிற்கு பின் சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்கும் சுமுகமான உறவு ஏற்படும். அக்காலத்தில் சித்தர்களால் நிர்மாணிக்கப்பட்ட நகரம் இது. ஆதியில் தமிழ் மக்கள்தான் இலங்கையை ஆண்டு வந்தார்கள். அவர்களின் வம்சாவளிகள்தான் இன்றும் இருக்கின்றனர். அகஸ்தியரும், காகபுசுண்டரும் வத்து மலையில் பலகாலம் தங்கியிருந்த இடமாகும். காகபுசுண்டர் வழியில் வந்த வம்சத்தினரின் ஒருபகுதிதான் பண்டார வன்னியன், காக்கைவன்னியன் என அறிகிறோம். ஆக இப்படி தமிழர் வளர்த்த இலங்கையில் பிற் காலத்தில் தமிழகத்தில் இருந்து 600 வீரர்களோடு வந்த விஜயன் என்ற தமிழ் அரசனின் மரபினர்தான் தங்களை சிங்களவர் என கூறிக்கொள்கிறார்கள். உண்மையில் சிங்களவர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்கள்தான். யாமும் வத்து மலையில் அகஸ்தியருடன் பலகாலம் தங்கியிருந்தோம். ஆக சித்தர்கள் உருவாக்கிய பூமியில் நிலைபெறும் இச் செல்வ விநாயகர் கோயில் மக்களுக்கு நல்ல பலணை தந்து மக்க்ள் சுமுகமாக வாழ வழி வகுக்கும் என ஆசீர்வதிக்கிறேம்.

அன்புடன்,

ஸ்ரீலஸ்ரீ தலையாட்டி சித்தர் சுவாமிகள்
வக்கணையார் கோவில்
பிருமம ரிஷி மலைச்சாரல்
பெரம்பலூர் - 621 212.
திருச்சி மாவட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

K. ALUDIAPILLAI, I.A.S
Commissioner & Secretary to Govt.
Commercial Taxes & Religious
Endowments Department

Fort St. George,
Madras - 9

I am very glad to learn that the Maha Kumbabishekam of Arulmighu Selva Vinayagar Temple at Kandy is to be celebrated on 7th September 1988. Arulmighu Selva Vinayagar Temple at Kandy is not only a land mark in the ancient capital of Sri Lanka but has been a centre around which the social life of the local citizens has been going on for centuries. Situated as it is near the sacred area of the Dalada Maligawa the Selva Vinayagar Temple is held in high esteem both by the Sinhalese and by the Tamils living in the Hill Districts of Sri Lanka. I have been a regular visitor to the temple during the period I served in Sri Lanka and I have been always impressed with the cleanliness of the temple and the devotion with which the Archakars of the temple have been performing their functions. I wish to convey my very best wishes to the Thiruppani Committee headed by Thiru G. Krishnamurthi, Managing Trustee of the temple on this great occasion. May the blessings of Sri Selva Vinayagar promote the well being and happiness of all.

*K. Aludiapillai*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# மஹா கும்பாபிஷேகம்



## ஆலய பிரதம குரு: "சிவாச்சாரிய திலகம்"

## சிவஸ்ரீ: இ. சோமாஸ்கந்தக் குருக்கள்

புனித புண்ணிய பூமியாகிய பரத கண்டத்தின் தென்பால் அமைந்துள்ளதும்' இலங்காபுரி, இரத்தினத்துவீபம் எனப் பல்வேறு சிறப்புப் பெயர்களாலழைக்கப்படுவதுமான இலங்கைத் தீவின் ஹ்ருதய ஸ்தானமாக அமையப் பெற்றது கண்டி மாநகரமாகும். இப்புனித நகரிலே சுத்த ஷாட் குண்ணிய மூர்த்தியும், நிர்மலனும், நித்திய வஸ்துவுமாகிய இறைவன் ஸ்ரீ செல்வவிநாயகர், மீனாட்சி அம்பிகா சமேத சோமசுந்தரேஸ்வரர் ஆகிய வடிவங்களைத் தாங்கி, எல்லையற்ற அருளொளி வீசி, சகல ஜீவராசிகளையும் இரட்சிக்கும் திருவுளப் பாங்குடன் கோவில் கொண்டெழுந்தருளியமை யாம் பெற்ற பெரும் பாக்கியமாகும். மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய முப்பெருமைகளைக் கொண்டிருப்பதுடன் சைவ சமயிகளால் மட்டு மன்றிப் பல்வேறு சமயத்தவர்களாலும் ஆராதிக்கப் பெறுவது இத்தலத்துக்குரிய சிறப்பான அம்சமாகும். இக்கோவிலில் அஷ்டபந்தன புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நடைபெறும் இச்சந்தர்ப்பத்தில் கும்பாபிஷேகத்தின் மகத்துவத்தையும் தத்துவங்களையும் சுற்று ஆராய்வது சாலப்பொருத்தமானதாகும்.

''உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே'' என்பது முதுமொழி. கல்வியறிவு ஒழுக்கங்களினால் மேம்பட்ட சான்றோர்களினால் உலகு உயர்வடைகிறது. ஆயினும் உலகு மாயையோடு தொடர்புடையது. மாயா சம்பந்தமான உலகிலே இகவாழ்வில் ஈடுபட்டி ருக்கும் ஒவ்வொரு உயிருக்கும் இலட்சியமாக அமைவது பேரின்பவீடு எனும் பரவாழ்வாகும். இவ்வீட்டுப்பேற்றையடைவதற்குரிய சாதனமாக மானுடப்பிறவி அமைவதனாலேயே தமிழ் மூதாட்டி ஔவைப்பிராட்டியார் ''அரிது அரிது மானுடராதலரிது'' எனக் கூறிப்போந்தார். ''நமக்கு இந்தச்சரீரம் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட் டேயாம்'' என்னும் ஆன்றோர் வாக்கையும் நாம் ஈண்டு கவனிக்கற்பாலது. அநுபூதியினால் இறைவனையுணர்ந்து ஆத்ம ஈடேற்றம் பெறுவது மானுடப் பிறவியின் மூலமே கை கூடக் கூடிய தொன்றாகும்.

பசுவின் தேகத்தில் எங்கும் பால் வியாபித்திருப்பினும் அதன் மடியிலிருந்தே நாம் பாலைப் பெறுவது போல இறைவன் சர்வ வியாபகராக எங்கணும் நீக்கமற நிறைந்திருப்பினும் ஆலயங்களில் தொழுவதன் மூலமே அவருடைய பூரண கிருபா கடாட்சத்தைப் பெற முடியும் என்பது சைவ சித்தாந்தத்துணிபு. இக்காரணம் கொண்டே ''கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என ஔவைப்பிராட்டியார் வலியுறுத்திக் கூறினாரெனலாம். ஆகவே ஆன்மாக்கள் ஈடேற்றம் பெறும் பொருட்டு ஊர்கள் தோறும் ஆலயங்களை அமைத்து இறைவனை அவற்றில் ஆவாஹித்து முறையாகக் கும்பாபிஷேகம் செய்து வழிபடுதல் இந்து சமயத்துக்குரிய தனிப்பெருஞ்சிறப்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன் ஆன்மாக்களிடம் மூகிழ்ந்த பெருங்கருணையினல் கோயில் கொண்டெழுந்தருளும் தெய்வத்தின் திருவருள் குறைவின்றி நிறைவாகப் பொலிந்து விளங்கும் பொருட்டு ஆற்றப் படும் கிரியைகளின் தொகுப்பே ''கும்பாபிஷேகம்'' எனப் பொதுவாக அழைக்கப்படினும் குறிப்பிட்ட ஒரு சுப முகூர்த்தத்தில் புனிதமான கும்பநீரை அபிஷேகம் செய்தலையே சிறப்பாக இச்சொற்றுேடர் குறிக்கும். கும்பாபிஷேகக் கிரியைகளில் அதி முக்கியமான நிகழ்ச்சியும் அதுவேயாகும். கும்பத்தின் மகத்துவம் முழுவதும் அபிஷேகத்துக்கு முன் அது அமைந்த இடத்திலேயே தங்கியுள்ளது. அந்த இடம்தான் யாகசாலை எனப்படும். உத்தராங்கக் கிரியைகளின் அங்கம் முழுவதும் யாகசாலையை மையமாகக் கொண்டே செய்யப்படும். யாக சாலைகள் அமையவேண்டிய இடம், ஹோம குண்டங்கள், அவற்றின் எண்ணிக்கை, விஸ்திரணம் யாவும் காமிகாகமத்தில் விரிவாவக் கூறப்பட்டுள்ளன.

ஐந்து பிரகாரமுள்ள கோவிலில் 33 ஹோம குண்டங்களும் மூன்று பிரகாரமுள்ள கோவிலில் 25 அல்லது 17 குண்டங்களும், இரண்டு அல்லது ஒரு பிரகாரமுள்ள கோவிலில் 9 குண்டங்களும் அமைப்பது உத்தம யாகம் எனக் கூறப்பட்டுள்ளது. ஏனைய ஆகமங்களும் இதனை அநுசரித்தும் சில தன்மைகளில் வேறுபட்டும் யாகத்தின் அவசியத்தை வலியுறுத்தி விதிகளை அமைத்துள்ளன.

''யாக சாலா'' என்ற வடமொழிப்பதத்தில் ஒவ்வொரு அட்சரத்துக்கும் நிறையப் பொருள் உண்டு. 'ய' காரம் யாகத்தையும் (அக்னி) 'க' காரம் செல்லுதலையும், 'ச' காரம் சுகத்தையும், 'ல' காரம் லயத்தையும் குறிப்பதால், யாகசாலை என்னும் தொடர்பதம் ''ஞானயாகத்தால் லயஸ்தானத்திற்கு சுகத்தின் பொருட்டுச் செல்லுதல்'' என்று பொருள் படும். எனவே ஞானயாகம் செய்வதற்குரிய இடம் யாகசாலையாகும். இப்புனித யாகத்தின் மத்தியஸ்தானத்தில் வைத்துப் பூஜிக்கப்படுவது 'கும்பம்' எனப்படும்.

கும்ப வடிவத்தின் சிறப்பு யாதெனில் கும்ப வஸ்திரம் தோலாகவும் கும்பநீர் மேதை (இரத்தம்) ஆகவும், தர்ப்பை (கூர்ச்சம்) எலும்பாகவும், சுற்றிய நூல் நரம்பாகவும், நவரத்னம் ஸ்வர்ணம் ஆகியவை சுக்கிலமாகவும், தேங்காய் மாவிலை சிரசாகவும் மந்திரங்கள் உயிராகவும் நவ தாதுக்களின் சேர்க்கையாகவும் விளங்குவதுடன் சிவலிங்கம் போல் அருவுரு வமாக, ஸர்வ தேவதாஸ்வரூபமாக, விரும்பிய எந்தத் தெய்வத்தையும் ஆவாஹிக்கக்கூடிய முறையில் அமைந்துள்ளமையாகும்.

சைவ சமய அனுஷ்டானங்களில் அக்கினி வழிபாடு சிறப்பான இடத்தைப் பெறு கின்றது. பஞ்ச பூதங்களிலொன்ருன அக்கினியின் பணி கும்பாபிஷேகத்தில் முதன்மை யானது. இதன் பொருட்டே யாகசாலையில் ஹோம குண்டங்கள் அமைகின்றன. அவற்றில் செய்யப்படும் ஆகுதிகள் யாவும் நாடி சந்நானம் மூலம் கும்பத்தைச் சென்றடைகின்றன.

சைவ சித்தாந்த தத்துவச் சிறப்பினை உணர்த்தும் பெற்றி வாய்ந்தது கும்பாபிஷேக கிரியையாகும். மெய்யடியார்கள் இறைவன் கருணையை அநுபவ ரீதியாகப் பெற வழி வகுப்பதும் கும்பாபிஷேகக் கிரியையாகும். தூய வடிவமான ஸ்தூபி அபிஷேகத்தையும் மூல மூர்த்திக்குரிய அபிஷேகத்தையும் தரிசிப்பவர்கள் இகத்தில் எல்லா நலன்களையும் பெற்று வாழ்வதுடன் பிறவித்துன்பத்திலிருந்துதும் விடுபடுவர் என சைவ சாஸ்திரங்கள் இயம்புகின்றன. மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய முப்பெருமைகளையும் கொண்ட மத்திய மாகாண கண்டி நகர் ஸ்ரீ செல்வ விநாயகர் பெருமானின் திருக்குட, திருமஞ்சனப் பெரு விழாவை செய்த, செய்வித்த அனைவரும் இகவாழ்வில் தர்மம், அர்த்தம், காம்யம் எனும் புருஷார்த்தங்களைப் பெற்று ஈற்றில் மோக்ஷப்பேறு பெற்று ஈடில்லாப் பேரானந்தப் பெரு வாழ்வைப் பெற்றுய்ய எல்லாம் வல்ல செல்வ விநாயகப் பெருமானின் திருவருளை வேண்டு வோமாக.

''வாழ்க சிவநெறி வளர்க சிவத்தொண்டு!''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு. K. K. சுப்பிரமணியம்
உதவி சுங்கத் திணைக்கழக கலக்டர்
இந்து சங்க துணைத் தலைவர்

இந்து சமய பக்தர்களின் புனிதஸ்தலமான கண்டி கட்டுக்கலே ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயத்தில் நடைபெறும் மகா கும்பாபிஷேகம் சாதி சமய மொழிப் பேதமின்றி மக்களனைவரும் ஒற்றுமையாக வாழ வழி வகுக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.



அமரர்.
திரு. எம். நாச்சியப்பன்

கண்டியை வசிப்பிடமாகக் கொண்ட இவர் கடந்த முப்பத்தேழு வருடங்களாக இவ்வாலயத்தில் குருசாமி ஆலயத்தின் அர்ச்சகராகவும் கோவிலின் தெய்வங்களுக்குப் பூச்சூடிக் கொடுக்கும் பண்டாரமாகவும் சேவையாற்றினர். ஆலயத்தின் வளர்ச்சிக்கும், புகழுக்கும் காரணமாகத் திகழ்ந்த அன்னர் சில வாரங்களுக்கு முன் எம்மை விட்டுப் பிரிந்தது எமக்கோர் பேரிழப்பாகும். அன்னரின் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல விநாயகனைப் பிரார்த்திப்போமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை இந்து மகா சபையின் தலைவர்

# வே. பாலசுப்பிரமணியம் அவர்களின்

# ஆசிச் செய்தி

கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது எமது முன்னோர்களின் போதனையாகும். இதனைப்பின்பற்றியே அவர்கள் சென்று வாழ்ந்த இடங்களிலெல்லாம் கோவில்களைக் கட்டி அவற்றைச் சிறப்புறப் பாலனம் செய்து வந்திருக்கிறார்கள். கண்டி மாநகரின் வாயிலில் அதன் காவல் தெய்வமாக கட்டுக்கலை செல்வ விநாயகர் கோவில் அமைந்திருக்கிறது. இக் கோவில் பழமை வாய்ந்த கோவில்களில் ஒன்றாகும். இக் கோவில் 1765 ஆம் ஆண்டளவில் நிர்மாணிக்கப்பட்டது. கட்டுக்கலை செல்வ விநாயகர் கோவில் கோவிலுக்குரிய எல்லா சிறப்பு அம்சங்களையும் கொண்டு விளங்கி, கண்டி வாழ் சைவமக்களுக்கு மாத்திரமன்றி இலங்கையின் ஏனைய பகுதி மக்களுக்கும் ஒரு சிறந்த தலமாக விளங்கிவருகிறது.

ஆயினும் இக் கோவிலுக்கு உரிய முறையில் பல காலமாக கும்பாபிபிஷேகம் நடைபெறவில்லை என்பது ஒரு குறையாக இருந்தது. அந்தக்குறை நீங்க இப்பொழுது இருக்கும் அறக்காவலரும், தர்ம கர்த்தாக்களும் பாரிய முறையில் கும்பாபிஷேகம் செய்ய ஆயத்தங்கள் செய்துள்ளார்கள்.

இக் கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற்று எல்லாம் வல்ல விக்னேஸ்வரப் பெருமானின் திவ்விய கடாட்சம் எங்கள் எல்லோருக்கும் கிடைக்கும் வண்ணம் நன்கு நடைபெற அப்பெருமானையே வணங்கி வழிபடுகிறேன்.

இக் கும்பாபிஷேகத்தைச் சிறப்புற நடாத்த ஒழுங்குகள் செய்த கோவில் அறக்காவலரையும் மற்றும் ஒத்துழைப்பு நல்கிய தர்ம கர்த்தாக்கள், சைவ மக்கள் யாவரையும் வாழ்த்துவதோடு அவர்கள் மேற்கொண்ட கைங்கரியம் சிறப்புற மீண்டும் எனது வாழ்த்துக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை இந்து மத ...

ஜே. பாலசுப்ரமணியம் அவர்களின்

# ஆசிச் செய்தி

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பா யோகிநந்த சர்மா

மத்திய மாகாணத்திலே
மலையகத்தின் மணிவிளக்காய்
மங்கா புகழ் பெற்றுவிட்ட
மாநகர் கண்டியிலே

கட்டுக்கலை பதி வாழும்
கணபதி நாயகனை
கவலைகள் தீர்த்திடவே
கரங்கூப்பி வணங்குகின்றோம்

செல்வம் தனை நிறைந்த
செல்வ விநாயகனே
செல்லும் இடமெங்கும்
சேர்த்திடப்பா நின்புகழை

துயர் தீர்த்தருளுகின்ற
தும்பிக்கை முகத்தோனே
துவழுகின்ற மானிடர்க்கு
துணையாய் நீ நின்றிடப்பா

குன்று தோறாடி வரும்
குமரனுக்கு தமையோனே
கும்பா பிஷேகம் காண
குவிக்கின்றோ கரம் தனையே


உமாபதியே உலகமென்ற
உண்மையை உணர்த்திட்ட
உமையாளின் திருமைந்தா
உன் பாதம் சரணமப்பா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சரித்திர காலந்தொட்டு இன்றும் நடக்கும் கண்டி மகா பெரஹராவின் இறுதி நாளன்று கண்டி நான்கு பௌத்த தேவாலயத்தின் பஸ நாயக்க நிலமேக்கள் ஆலயத்தில் இறைவணக்கம் செலுத்தியபின் பகல் பெரஹரா ஆரம்பிக்கும் காட்சி.



அகில இலங்கை இந்து மாமன்ற மகாநாட்டின்போது தேவஸ்தான நிர்வாக இயக்குநர் G. கிருஷ்ணமூர்த்தி அவர்களும் கண்டி இந்து இளைஞர் மன்ற தலைவர் V. பாலசுப்ரமணியமும் கலந்து கொண்டபோது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பாபிஷேக முறைகளும் விளக்கமும்

*பிரதிட்டபூஷணம் நயினை ஐ. கைலாசநாதக் குருக்கள் —*

*அனுதிமலமுத்த சித்துருவாகிய பரம்பொருள் கற்பனை கடந்த சோதியாகினும், அனுதிமல பெத்தர்களாகிய ஆன்மாக்கள் வணங்கிப் போக மோக்ஷங்களை அடைய ஆலயத்தில் நிறுவப்படும் விநாயகரை திருவுருவில் கருணையே உருவாகும்படி பிரார்த்தித்து அபிஷேகித்தலே கும்பாபிஷேகமாம்.*

*''கும்பாபிஷேகம்'' என்பது குடமுழுக்கு, ''குடநன்னீராட்டு விழா'' என்று சொல்லுவார்கள். இது பிரதிஷ்டை என்றும் கூறப்படும். இது நான்கு வகைப்படும். அவையாவன :*

*(1) ஆவர்த்தம் (3) புனராவர்த்தம்*
*(2) அனுவர்த்தம் (4) அந்தரீதம்*

ஆவர்த்தம் : *புதிதான ஓர் இடத்தில் விநாயகரை வைத்துப் பாலப்பிரதிஷ்டை செய்து பூஜித்துப் புதிதாகக் கோவில் கட்டி, பாலாலய மூர்த்தியைக் கும்பத்தில் எடுத்து பின்னர் மூலஸ்தானத்தில் இருக்கும் மூர்த்தியில் சேர்த்து அபிஷேகம் செய்வதாம்.*

அனுவர்த்தம் : *வெகு காலத்துக்கு முன் கோயில் கட்டி பூஜையில்லாமல் அழிய விட்டும், சீர்குலைந்தும் இருந்து, முன்போல் அவைகளைத் திருத்தி ஆலயம் கற்பித்துக் கும்பாபிஷேகம் செய்தலாம்.*

புனராவர்த்தம் : *கர்ப்பக்கிரகம், விமானம், பிரகாரம், கோபுரம், பலிபீடம் முதலியவைகளில் பழுது ஏற்பட்டாலும், அட்டபந்தனத்தில் பழுது உண்டானுலும், விமானத்தில் உள்ள விக்கிரகங்களில் பழுது நிகழ்ந்தாலும், வர்ணம் அழிந்து இருந்தாலும், பாலாலயம் செய்து ஆலயத்தைப் புதுப்பித்து மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம் செய்தலாம்.*

அந்தரீதம் ; *ஆலயத்தில் சோரன் சண்டாளன் நாய் முதலியன உட்சென்று தீண்டியதன் காரணமாக மூர்த்தியின் பிரத்தியங்கம், உபாங்கம் போன்றவைகளில் ஏதாவது பழுது ஏற்பட்டால் அவைகளைத் திருத்தி உடனே செய்வதாகும். இதில் அந்தரீதப் பிரதிஷ்டைக்கு நாள், நட்ஷத்திரம் பார்க்கவேண்டியதில்லை என்பது குறப்பிடத்தக்கதாகும்.*

அனுஞ்ஞை : *இறைவணக்கம் செய்து சர்வசாதகரிடத்திலும், விநாயகர் இடத்திலும் நாள் குறித்தகாலத்தில் இந்த மகத்துவமான கும்பாபிஷேகத்தை செய்ய உத்தரவு தரவேண்டும் என்று வணங்கி உத்தரவு கேட்பதாம்.*

தனபூஜை : *புண்ணிய வசத்தால் கிடைத்த திரவியத்தை பூஜை செய்தலாகும்.*

திரவிய விபாகம் : *பூஜை செய்த திரவியத்தை ஒருபாகம் ஆலயக் கட்டடவேலைக்கும், இரண்டாவது பாகம் நித்திய பூஜை, மாசாந்த விசேட நட்சத்திர பூஜை, உற்சவம் ஆபரணுதிகட்கும் இராமாதிவாங்கவும், மூன்ருவது பாகத்தை பதினெருபாகம் செய்தல் வேண்டும்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசாரியவர்ணம்: பிரதான ஆசாரியரையும், சர்வசாதகரையும் வணங்கி இத்திரவியத்தைக் கொண்டு மகாகும்பாபிஷேகம் செய்து இறையருளைப் பெற்றுத்தர வேண்டும் என்று எசமான் குருவை வழிபடுதலாகும்.

கணபதி பூஜை : எவ்வகையினராயினும் முதலில் விநாயகரை வழிபாடு செய்தல் வேண்டும்; செய்யாவிடில் அவர்களின் காரியத்தை இடையூறு செய் என்று இறைவன் கட்டளை என்பது ''என்னரேயாயினும்'' என்ற திருவிளையாடற் புராணத்தில் விளங்குகின்றது. ஆகவே இங்கு தொடங்கிய மகாகும்பாபிஷேகம் இடையூறு இன்றி நிறைவேற விநாயகப் பெருமானுக்குப் பூஜை அபிஷேகம் ஹோமம் செய்து முதலில் பிரதான சிவாசாரியர் வழிபடுதல்.

கிராம சாந்தி : ''சர்வலோக இதம் புண்ணியம்
வட்சியே சந்த சடானன
கிராம நுதன காலேது
ஷேத்திரவா மந்திரேவிவா
பிரதிஷ்டோத்துவ காலேச
பூஜாம் கருத்துவாவிசேஷவதா'' என்று காரணாகமம் கூறுகிறது. விளக்கம் சகலலோக சுகத்துக்கும், புதிதானபட்டினம், கிராமங்களில் உள்ள அசுர, ராட்சத, பிசாசு, பிரம ராட்சதர்களைத் திருப்தி செய்து சந்தோசபபடுத்தி, கிராம அதிதேவதையான வைரவரைப் பூஜித்தலாம்.

பிரவேசபலி : நாம் பிரவேசம் செய்து மகா கும்பாபிஷேகம் செய்யும் இடத்தில் உள்ள எட்டுத்திக்குகளிலும் வசிக்கின்ற இயக்கர், இராட்சதர் பிசாசர், பிரம இராட்சதர், பூதர், காளி, சரளி, வைரவர் முதலிய தேவதைகளுக்கு உணவு கொடுத்து எழுப்பி, அவர்களை முறையே கடல், மலை. வனம், நதி, மயானம் முதலிய இடங்களிற் சென்று சுகமாய் வீற்றிருங்கள்: இது இறைவன்கட்டளை எனக்கூறித் திருப்தி செய்தலாம். இது மகா கும்பாபிஷேகம், திருவிழா, புதுவீடு குடிபுகல் போன்ற காரியங்களிற் செய்ய வேண்டும் என்று ஆகமங்கள் கூறுகின்றன.

திசாஹோமம் : நான்கு திக்குகளில் முறையே பாசுபதாஸ்தம், அஹோராஸ்திரம், பிரத்தியங்கிராஸ்திரம், சிவாஸ்திரம் முதலியவர்களைப் பூசித்துக் காவல் செய்யும்படி கட்டளை இடுதலாம்.

இரட்சோக்கிரஹோமம் : அசுர, ராட்சதர்களின் தொல்லை நீங்குவதற்காக மூன்று மேடைகள் அமைத்து, நடுவில் கும்பம்வைத்து, அதில் ரட்சோக்கிர தேவதையை வடவாமுகாக்கினிக்குச் சமமாகப் பாவித்துப் பூசை செய்து அதன் தென் புறத்தில் வெள்ளை வஸ்திரம் இட்டு, தேங்காய் வைத்து, தேங்காயில் சிவனையும் வாளில் கட்சேசுவரனையும் வாளைச்சுற்றி அசிதாங்கபைரவர், குருபைரவர், சண்டபைரவர் முதலிய எண்மரைப் பூசித்து, அவர்களுக்கு உள்ள திரவியங்களாலும் சமித்தாலும் ஹோமம் செய்து, சம்யோசித்துக் கும்பஜலத்தை ஆலயத்தைச் சுற்றித்தெளித்தலாம்.

ஆயுஸ் கர்மம் : குருமார் செய்து கொள்ளும் தசவித ஸ்நானமாம்.

நவக்கிரகமகம் : கும்பாபிஷகத்தால் உலகத்துக்கு அதிக மழையாலும், மழையின்மையாலும், விரோதிகளாலும், துஷ்டர்களாலும் வரும் துன்பம் நீங்கவும், எல்லாப் பிராணிகளின் பயம், நோய், பிணி நீங்கவும் சூரியன் முதலிய நவக்கிரகங்களைப் பூசித்து வணங்கி ஹோமம் செய்தலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாஸ்து சாந்தி : பூமியானது அசத்தாக, ஜடசம்பந்தம் உள்ளதினுல் அதை நீக்கிச் சத்பாவம் உண்டாவதற்குச் செய்வது. அசுத்த சொரூபமான பூமியை பாலாக்கினியால் தகித்துப் பின்பூமிக்கு அதிபதியான பிரமாவின் மூச்சுக்காற்றினுற் சோதி-ரூபமாக்கிச் சுத்தம் செய்வதாம். நீற்றுப்பூசினிக்காயைப் பூமியின் வடிவமாகத் தியானித்து, அதன் விதைகளை அண்டங்களாக நினைத்து, எல்லாவற்றையும் ஹோமம் செய்து பின் பூமிக்கு அதிபதியான பிரமாவின் கட்டளையினுற் பரிசுத்தமானதாகப் பாவித்தல் வாஸ்து சாந்தியாம். இச்சாந்தி கும்பாபிஷேகம், பலஸ்தாபனம், யாக மண்டப கல்பனம், கோபுரம், தடாகம், வீடு, உற்சவம் போன்ற இடங்களில் அவசியம் செய்யவேண்டும்.

கோபூஜை : பசுமாடு கன்று கட்டுதல்,

விற்பிரபோசணம்; வேதம் அறிந்த பிராமணர் பிருதுவி, முதல் சுத்தத்துவம் வரையுள்ள எல்லாத்தத்துவங்களையும் சுத்தமாக்குகின்றேன்; ஹோமம் செய்கின்றேன்; இது நன்கு சுத்தி அடையட்டும் என்று சிதாக்கினியில் ஹோமம் செய்கின்ற பாவனையில் போறுணம் செய்வித்தலால் அந்த இடம் சுத்தியாகும்.

மிருத்சங்கிரகணம் : கிராமத்துக்குச் சாந்தியையும் தேசநன்மையடையவும் நினைந்து, பூமா-தேவியைப் பிரார்த்தித்து, இந்தப் பூமி கண்டங்களாகப் பிரிந்து இருப்பதால் ஒவ்வொரு கண்டத்துக்கும் பூசை செய்து, பிரார்த்தித்து, ஞானயாகம் செய்ய முளையிடுவதற்காக மண்வெட்டியை சிவாஸ்திரமாகப் பூசித்து, பூமி தேவியின் வயிற்றில் மூன்று அல்லது ஐந்து முறை மண்ணை எடுத்தலாம், எடுத்த தோசம் நீங்க அந்த இடத்துக்கு வேறு மண் போட்டுச் சப்தவாரிதி சம்பத்தால் அபிஷேகம் செய்தலாம்.

அங்குரார்ப்பணம் : முளையிடுதல், இந்தப் பூமியானது முன்னர் அமிர்தத்தால் நனைந்து சுத்த-மானது. ஆகையால் உலகச் சேமத்தின் பொருட்டு நெல் முதலிய நவதானியங்களைப் பாலில் ஊறவிட்டு ''ஓசதி சூக்தம்'' செபித்துச் சந்திரனை வணங்கி முளையிடுதலாம்.

ரஷாபந்தனம் : காப்புக்கட்டுதல், குழந்தையின் வருத்தம் தீர மாதா மருந்துண்ணுதல் போல, உலக சேமத்திற்காக ஆசாரியர் எடுத்தகாரியம் செவ்வனே நிறைவேற இடையூறுகள் தடுக்காவண்ணம் இறைவியின் கர்ப்பநாடியில் நின்றும் உண்-டானதாக நாகராசனைப் பூசித்துக் கையில் கங்கணம் கட்டுதலாம்.

இரத்தினநியாசம், நைநோன்மினணம் தானியாதிவாசம், சயனுரோகணம் கிராமப்பிரதட்சணம் : இவைகள் புதிதான மூர்த்திகளுக்குப் பஞ்சபூத சம்பந்தமான தத்துவங்கள் ஏற்படுத்துவதற்காகச் செய்யப்படும் கிரியைகளாம், அன்றியும் இறைவன் '' இருநிலனுய்த் தீயாகி நீருமாகி இயமானுனய் எறியுங் காற்றுமாகி'' என்ற தேவாரத்தில் இருந்து இறைவடிவத்தை உண்டு பண்ணும் குறிப்பை உணர்த்துவதும் ஆகும்.

யாகசாலா தானியாகதி ஸ்தாபனம்: யாகசாலையிற் சப்ததாத்துகள் மயமான சப்த தானியங்களைப் பரப்புதல்.

சூரியகாந்தி சங்கிரகணம்: ஞானக்கினிக்கு சூரிய காந்தத்தில் இருந்து அக்கினியை எடுத்தல்.

ருத்விக் சாதகாதி வரணம்: பிரதான குண்டத்தைத் தவிர ஏனைய குண்டங்களுக்கும் ஏனைய மூர்த்திகளுக்கும் ஏற்ற குருமாரையும் சாதகர்களையும் உபசாதகர்களையும் நியமித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிரசன்ன அபிஷேக பூஜை:** எங்கும் நிறைந்த மூர்த்தியைப் பூஜிப்பதற்காகத் தமக்கு நேர்முகப்படுத்தல்,

**கடஸ்தாபனம்:** குடத்தைச் சுத்தமாக்கிச் சப்ததாதுக்களும் ஜீவனும் உண்டாக்குவதற்காகக் கும்பத்தின் அடியில் ஆன்மதத்துவத்தையும் பிரமாவையும், கும்ப நடுவில் வித்தியா தத்துவத்தையும் விஷ்ணுவையும், கும்ப நுனியிற் சிவதத்துவத்தையும், ருத்திரனையும், கும்பத்தில் 9 சக்திகளையும், மூவினை துலிற் சரஸ்வதி, இலக்குமி, ரௌத்திரி ஆகியோரையும், கும்பத்திற்குப் பிடிக்கப்படும் தூபத்தில் அர்ச்சினி சக்தியையும், தீர்த்தத்திற் கங்கை முதலிய புண்ணிய நதிகளையும், மத்தியில் வருணனையும், நவரத்தினங்களில் வாமை முதலிய நவசக்திகளையும், தங்கத் தாமரைப் பூவிற் சதாசிவத்தையும், வாசனைத் திரவியங்களிற் சப்த மாதுருக்களையும் பூசித்துக் குடத்தில் இட்டு மாவிலைச் சடையாகவும், தேங்காயைச் சிரசாகவும், கூர்ச்சத்தை முடியாகவும், வஸ்திரத்தைத் தோலாகவும், ஜெஞ்ஞோபவீதத்தைப் பஞ்சப்பிரம மந்திரமாகவும் பூசிப்பதாற் கும்பமானது சர்வதேவதா சொரூபமாகிறது என்று ஆகமங்கள் கூறுகின்றன.

**கலாகர்சணம்:** கலைகளை இருத்தலாம்; சடத்துவன்னியாசமும் கும்பத்திற்குச் செய்ய வேண்டும் சடத்து வாவானது பரமேஸ்வரர் இருக்கும் ஸ்தானத்தை அடைதலுக்கு உரிய வழியாகும். இதில் சர்வ வியாபகராக உள்ள பரமேஸ்வரர் இந்த ஆறு அத்துவாக்களிற் கலந்தும் இருக்கின்றார். பரமேஸ்வரர் சக்தி சொரூபர் அதீதர்: சக்திக்கும் சக்தனுக்கும் பேதமின்மை ஆதலால் அங்காங்கிபாபம் என்றும் கூறப்படுகிறது. ஆகவே சக்தியின் இடத்தில் இருந்து கலையும், கலையில் இருந்து தத்துவமும், தத்துவத்தில் இருந்து புவனமும், புவனத்தில் இருந்து வர்ணமும், வர்ணத்தில் இருந்து பதமும், பதத்தில் இருந்து மந்திரமும் உண்டாயின. கலையில் தத்துவம் அடங்கியுள்ளதாதலின் தத்துவம் முதல் மந்திரம் இறுதியாக ஒன்றில் ஒன்று அடங்கி இருந்து திரும்ப வந்ததாதலின் இந்தச் கடத்துவாக்களைச் செய்யவேண்டும் என்பதாம். அன்றியும் கலாநியாசத்தால் சர்வஞ்ஞசக்தியும், தத்துவநியாசத்தால் நித்திய திருப்தியத்துவமும், புவன நியாசத்தால் அநாதிபோதத்துவமும், வாணநியாசத்தால் சுவதந்திரத்துவமும், பதநியாசத்தால் அலுப்த சத்தித்துவமும், மந்திரநியாசத்தால் அநந்த சத்தித்துவமும் சித்திக்கின்றமையால் அவசியம் செய்ய வேண்டும்.

**யாகசாலைப் பூஜை:** யாகசாலை கலாமயமாக விளங்குகிறது. நிவிர்த்தி முதலிய நான்கு கலைகளும் நான்கு பக்கநிலைகளாகவும். இதற்கு நான்கு கலசமும், இவைகளுக்கு இருபுறங்களிலும் நந்தி முதலிய எண்மர் வாயில் காப்பாளராகவும், கிழக்கு முதல் 8 திக்குகளில் கீழ், மேல், ஆகிய 10 திசைகளில், இந்திரன் முதல் விஷ்ணு ஈருக தசலோக பாலகர்களும் அக்கினிக்கு வடக்கில் சிவசூரியனும் நிருதிக்கு கிழக்கில் யாகபலனைத்தரும் வாஸ்து பிரமனும், வாயுவுக்கு தெற்கில் உத்தமப்பாக மண்டப ரூபமாகிய மகா லட்சுமியும், வாயுவின் வலப்புறத்தில் யாகத்தில் ஏற்படும் விக்கினங்களை நீக்கும் விநாயகரும், ஈசானத்துக்கு மேற்கில் எதையும் உத்தரவு கேட்டுச் செய்ய சதாசிவம் முதல் சப்த குரு மூர்த்திகளையும் பூசிப்பதற்கு, 27 கலசங்கள் வைத்து ஞானவாள் ஏந்தியபடி யாகேஸ்வரன், யாகேஸ்வரியையும் கலசத்தில் அமைத்து, 9 குண்டங்களோடு விளங்குகின்றமையால் யாகசாலை கலாமயமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவகுண்டம் : சிவபெருமானுக்குச் சொருபம், தடத்தம் என இரு வடிவங்கள் உள்ளன. சொரூபத்திருமேனி சுயப்பிரகாச திருமேனியாகும். அது உலகத்தைக் கடந்தவடிவம். தடத்வடிவம் என்பது உலகத்தோடு கலந்த வடிவமாம். இந்த உலகம் நிலம், நீர், நெருப்பு, காற்று, நீள்விசும்பு, நிலா, பகலோன். இயமானன் என்னும் எண்வகைப் பொருளிலும் கலந்தது. இதனல் இறைவனை எண்வகை உருவில் வைத்து வணங்கவேண்டும் என்பது பெற்றும். முதலில் நிலம் என்பது பிருதுவியாகும்; அது சதுரமான வடிவம்; அதைக் குறிப்பது கிழக்குத்திக்கில் அமைந்த நாற்கோண வடிமான குண்டமாம்.

நீர் என்பது அப்பு: இதன் வடிவம் பாதிச்சந்திரனை பிறைவடிவம்; அது தெற்கில் உள்ள பிறை வடிவமான குண்டமாம்

நெருப்பு என்பது தேயு; இதன் வடிவு முக்கோணம். இது தென் மேற்கு மூலையில் உள்ள முக்கோண வடிவம்.

வாயு : இது அறுகோணவடிவம்; இது வடமேற்கு மூலையில் அமைந்திருக்கிறது.

ஆகாயம்: இது வட்டவடிவினது; மேற்குத்திக்கில் உள்ள குண்டத்தில் அமைந்திருக்கிறது.

சூரியன் : இது தாமரைப்பூ வடிவம்; இது வடக்குத் திக்கில் அமைந்திருக்கிறது.

சந்திரன்: இது எண்கோணவடிவினது; இது வட கிழக்கு மூலையில் அமைந்திருக்கிறது.

இயமானன்: என்னும் ஆன்மர மாயாதத்துவத்தைக் குறித்து, அரசிலை வடிவாய் தென்கிழக்கு மூலையில் அமைந்திருக்கிறது. இவை எட்டுத்திக்கிலும் அமைய ஈசானத்திற்கும் கிழக்கிற்கும் மத்தியில் வட்டவடிவமான பிரதான குண்டத்தில் சுயம்பிரகாசமூர்த்தியாய் அமைந்துள்ளதுதான் இறைவடிவம். இறைவன் மேலே குறித்த 8 வடிவமாகிய உலகத்தில் கலந்து இருக்கிறுன். ஆகவே அவரை இந்த 8 வகையான குண்டத்தில் வைத்துப் பூஜித்து ஓமம் செய்து வணங்குகின்ருேம். இது எப்படியெனில், நமது அருவமான உயிரை உருவமான உடம்பில் வைத்து அனுமானித்துக் காண்பது போல இறைவனை வழிபாடு செய்தலே 9 குண்டங்களின் அமைப்பாம். இன்னும் ஈசானம் முதல் சத்தியோசாதம் இறுதியாக உடைய பஞ்சப்பிரம மந்திரங்களும் மூல மந்திரமும் சிவபெருமானுடைய எல்லாம் அறியும் தன்மை, வரம்பில் இன்பம் உடமை, இயல்பாகவே பாசங்களில் நீங்கிய தன்மை, தன் வயத்தாகும் தன்மை, பேரறிவுடைமை, பேர் அருளுடைமை, அளவிலாற்றல் உடைமை, தூய உடம்பினனுதல் முதலிய எண் குணங்களும் பிரதான குண்டத்தில் இறைவனுக்குப் போல் அமைந்து விளங்கும். மேலும்பிரதான வேதிகையில் அமைந்தாசனம் முதல் உள்ள ஆசனங்கள் மேல் சர்வதேவதா சொரூபமான இறைவனை வைத்து வணங்கும் இடமும் சிறந்த யாகசாலையேயாம்.

பதவின்யாசம் ; மூலஸ்தானத்து இறைவனை ஸ்தாபித்து ஏற்படுத்தும் இடத்தைக் குறித்தல். இதை "ஆசார்யசில்பின சார்த்கம், பிரவிசேக்காப கேமகம்" என்ற காரணுகம் விதிப்படி. ஆசாரியரும் சிற்ப சாஸ்திரியும் சேர்ந்து சிவன் அம்மாள் விநாயகர் முதலிய மூர்த்திகளைப் பிரதிஷ்டை செய்வதற்குரிய இடத்தை வகுத்தலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்தூபிஸ்தாபனம்: அதிஸ்டானம் முதல் (பட்டிகை) ஸ்தூபிவரியந்தமும் முறையே ஆறு அத்துவாக்களும் அமைய தூல லிங்கமாக அமைந்த பத்மத்தின் மேல் ஸ்தூபியை வைத்தலாம்.

தீபஸ்தாபனம்: இறைவன் சோதிவடிவினன்; அவனைச் சோதி வடிவாக வணங்குவதற்காக வைக்கப்படுவது தீபஸ்தாபனமாம். ''இல்லக விளக்கது இருள் கெடுப்பது .................. நல்லகவிளக்கது நமச்சிவாயவே'' என்னும் தேவாரம் இங்கு நினைவு கூரத்தக்கது

இரத்தினஸ்தாபனம்: நவரத்தினம், நவலோகம் முதலிய வஸ்துக்களை. ஆரோக்கிய. வீரிய பிரபா சக்திமயமானத் திரவியங்களைப் பீடத்தின் மேல் இட்டு, இந்திராதி லோக பாலகர்களைப் பூஜித்துப் பத்மாசனம் வரை பூசித்தல் இரத்தினஸ்தாபனம் ஆகும்

இயந்திரஸ்தாபனம்: கோடுகளும். கோணங்களும் இறைவனின் மூல பிராசாத மந்திரங்களும் எழுதிப் பூசிக்கப்பட்ட யந்திரத்தை உரிய இடத்தில் வைத்தலாம். இது இறைவனுக்கு அருள் சக்தியை ஊட்டுவதாம். (இது பேட்டுக்கு பற்றரி போல எனலாம்.

பிம்பஸ்தாபனம்; மூர்த்திகளை முறைப்படி வைத்தலாம்.

அஷ்டபந்தனம் : என்பது இறைவனின் அம்சமாகிய அஷ்ட மூர்த்திகளின் அருள் பெற்று, அணிமாதி அஷ்ட சித்திகளும் சித்தியடைந்த நிலையில் ஞானகிரியா சக்தியாகும். சங்கநிதி, பதுமநிதி இரண்டும் தோன்றி பரம்பொருளின் ஆணையால் சாம்பிராட்சிய லட்சுமியும், அதில் இருந்து பயன் தரும் வகையில் தனலட்சுமி தான்ய லட்சுமி, வித்தியா லட்சுமி, கீர்த்தி லட்சுமி, சௌபாக்கிய லட்சுமி, வீர லட்சுமி, ஜெயலட்சுமி, சந்தான லட்சுமி, ஈறுக அஷ்ட லட்சுமிகளும் உருக் கொண்டு உயிர்களை உய்விக்கும் வண்ணம் உள்ள கதிகளைத்தருவது அஷ்டபந்தன சமர்ப்பணமாம்.

சொர்ணபந்தனம்: தங்கத்தால் செய்வது.

தைலாப்பியங்கம்; விநாயகருக்குதைலத்தினல் (எண்ணெய்) ஆசாரியரும், சிற்பாசாஸ்திரியாரும், அன்பர்களும் சாத்துதல்; அன்பர்கள் தங்களிடத்தில் உள்ள ஆணவமல சம்பந்தத்தாலும், திரிகரணங்களாலும் ஏற்படும் குற்றம் நீங்கி சுத்தி அடைதற் பொருட்டு, எள்ளில் இருந்து எடுக்கப்பட்ட சுத்தமான நல் எண்ணெய்யை சுவர்ணத்தினல் தொட்டு இறைவனின் சிரசு, கண்கள், மூக்கு, செவி, தொப்பிள், பாதம், முதலிய எல்லா அங்கங்களிலும் குளிரும்படி நிறையச் சாத்துவதாம்.

பிம்ப சுத்தி : தீட்சாயினர்கள் முதலானோரால் பரிசிக்கப்பட்ட தோசநீக்கத்திற்காகவும், உஷ்ணசாந்திக்காகவும், பிம்பத்திற்குச் சுத்தம் உண்டாவதற்கு உதகம் கந்தம், புஷ்பம், பத்திரம், காசாயம், மிருத்தி, பீஜம், பல்லவம், இரத்தினம், லோகம், தாது, அஸ்திரம், ஓசதி, கவ்வியம், குசம், கிருங்கம் முதலிய 16 வகையான திரவியங்கள் நிரம்பிய கலசங்களைப் பூசித்து, ஓமம் செய்து, பின்னர் மூர்த்திக்கு முறைப்படி பஞ்சாமிர்தாதி முதலியவைகளால் அபிஷேகம் செய்து அலங்கரித்துப் பூசித்தலாம்,

பிம்பிரஷாபந்தனம்: கும்பாபிஷேக நிமித்தம் மூர்த்திகளுக்கு காப்புக்கட்டுதலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூர்வசந்தானம்: மூர்த்திக்குப் பக்கத்தில் ஆசாரியர், சாதகர் உட்கார்ந்து ஆதார சக்தி முதல் பஞ்ச மாவரணம் வரைபூசித்து, கலை முதல் மந்திரம் இறுதியாகச் சங்கோ-பாங்கமாக அவயவ பேதங்களாய் பிம்பத்திற்கு தர்ப்பை நுனியால் நியாசம் செய்தலாம்.

விசேடதிரவிய ஹோமம்: இறைவனை அக்கினிவடிவில் பூசித்தலாம், சகலவிதமான ஹோமத் திரவியங்களையும் இறைமயமாக்கி அதற்குரிய மந்திரங்களோடு பஞ்சப்பிரம மந்திரமும் வியாகிருதியும் சேர்த்துச் சொல்லி அக்கினியில் ஹோமம் செய்தலாம்.

ஸ்பரிசாகுதி : யாகத்தில் உள்ள மூர்த்தி, மூர்த்தீஸ்வரன், மூர்த்தீஸ்வரி, மந்திரம், ஆகிய-வைகளைப் பூஜித்து ஹோமம் செய்த முறைப்படி மூல மூர்த்தியிடம் சென்று அந்தந்த ஸ்தானங்களில் முறையே தொடர்பு படுத்தலாம்.

ஸ்ரோத்திர வந்தனம்: ஆசாரியர் மூர்த்தியர்கள் செய்த தொடர்புகளில் கூடுதல், குறைவு ஏற்பட்டால் அவைகளைக் கருணையினுல் பூர்த்தியாக்கி அருள் செய்ய வேண்டும் என்று பிரார்த்தித்தலாம்

ஆசாரிய பூஜை: குருமாருக்கும், சர்வசாதர்களுக்கும் உடை, உத்தரீயம், உஷ்ணீசம், உருத்-திராக்ஷம், மோதிரம், விபூதிப்பை முதலிய உபசாரங்கள் கொடுத்து மகிழ்வித்தலாம்.

அக்கினிசம்யோஜனம்: பிரதானகுண்டத்தில் பூஜை செய்து எடுத்த அக்கினி மூர்த்தி, முதலானவைகளைப் பிரதான ஆசாரியர் மூலம் குண்டத்தில் சேர்த்தலாம்,

பூரணுகுதி ; ஓமத்தைப் பூர்த்தி செய்வதற்காகச் செய்யப்படும் கிரியை.

தீபாராதனை : சோடசோபசார விசேட பூசையாம்,

வேத கோசம் : வடமொழி வேதம் முதலியன ஓதல்; தமிழ் வேதம்.

ஸ்தூபி கும்பாபிஷேகம்: விமானங்களில் உள்ள ஸ்தூபிக்கு அபிஷேகம் செய்தல்

மகா கும்பாபிஷேகம்; அர்ச்சகர், ஸ்தானிகர் ஒருவரை நந்திகணத்தலைவராகப் பூஜை செய்து, அவருக்கு வேண்டிய உபசாரங்கள் செய்து அலங்கரித்து அவரது சிரசின் மீது பிரதான கடத்தை வைத்து, சர்வசாதகர், பிரதான குரு, மூர்த்தி-யர்கள் முதலியோர் கும்பத்தை தொட்டுக்கொண்டு, எஜமான்கள், பக்த ஜனங்கள் சூழ்ந்து புஷ்பாஞ்சலி, வேதம், தேவாரம், தோத்திரம், சங்கு, மங்கள வாத்தியம் பேரி, மணி முதலிய வாத்திய கோசங்களுடன் பஜனை செய்து பக்தியுடன் மெதுவாக வீதிவலம் வந்து, மூலாலயம் சென்று, ஆசனத்தின் மீது கும்பங்களை வைத்து, கும்பத்திற்கும் மூர்த்திக்கும் நாடிசந்தானம் செய்து தொடர்பேற்படுத்தி, உரிய முகூர்த்தத்தில் இறைவன் ஆவாகனம் செய்து, மூலமந்திரம் உச்சரித்துப் பதமந்திரத்துடன் பக்தர்கள் ஹரஹர என்ற சத்தம் முழங்க, வேத சிவாகமம் தேவார, புராண திருமுறைகளை பக்தர்கள் ஓத, சகலவாத்திய கோசங்களும் ஒலிக்க, மகா கும்பாபிஷேகத்தைச் செய்து எஜமானர்களும் சகல ஜீவராசிகளும் உய்தி அடையப் பிரார்த்தித்துச் செய்வதே மகாகும்பாபிஷேகமாகும். வர்த்தனீ கும்பத்தை ஆவுடையாருக்கும், வித்தியேஸ்வரக் கும்பங்களை ஆவுடையாரைச் சுற்றிலும் அபிஷேகித்து, மகாநைவேத்திய உபசாரம் செய்து, அகண்ட தீபம் வைத்துப் பிரார்த்தித்த பின்னர் தேவர்களின் பூசைக்காகமூன்றே முக்கால் நாழிகைக்கு கதவைச் சாத்தி வைக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தசதர்சனம் : கதவைத்திறந்து பசு, ஆசாரியர், வேதபாரகர், கண்ணுடி, பூரணகும்பம், தீபம் கன்னிகை, சன்னியாசி, சுமங்கலி, எஜமான், பக்தசனம், முதலியோரைச் சகலவாத்திய உபசாரங்களுடன் தனித்தனியே தரிசிக்கச் செய்தல்.

பிராயச்சித்த ஆகுதி: இது யாகத்தில் செய்வது.

ஆசார்ய உற்சவம்: குருவழிபாடு

எஜமானுக்குப் பலப்பிராப்தி; எஜமானுக்கு கும்பாபிஷேகப் பலனை ஒப்புவித்தல்.

இன்னும் இதைப்பற்றிய விளக்க விரிவுகள் அநேகம் உண்டு. அவைகளை இன்னும் அறிந்தோர் வாயிலாகக் கேட்டுப் பேரானந்தப் பெரு வாழ்வு அடைவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தக விநாயகர்

செஞ்சொல்மணி, புலவர்
**பு. மா. ஜயசெந்தில்நாதன்,** எம். ஏ.,
ஆஸ்தான புலவர் - ஸ்ரீ சங்கர மடம், காஞ்சிபுரம்
தமிழ்த்துறை - பச்சையப்பன் மேல்நிலைப் பள்ளி
காஞ்சிபுரம்.

இறைவன் எல்லாம் வல்லவன் **(God is Almighty)** என்பது உண்மை நூல்கள் பலவற்றின் துணிபு.

இறைவன் முடிவிலா ற்றலுடையவன். இந்த முடிவில் ஆற்றல் காரணமாகப் பல் வேறு செயல்களைச் செய்தும் பொருள்களை அறிந்தும் இருக்கும் இறைவன், தனக்கென ஒரு நாமம், ஒருருவம் இல்லாத இறைவன் தனக்கு வேருக உலகத்தையும், உயிர்களையும் இயக் கிச் செயல்படுத்துகின்ற காலத்தில் பேராயிரமுடைய பெம்மானுகக் காட்சி தருகிறுன்.

இறைவனது பல்வேறு ஆற்றல்களில் இடையூறுகளை ஆளுதலும் ஒன்று. அந்த ஆற்றல் முனைந்து நிற்க விளங்கும் திருவுருவமே விநாயகர் உருவமாகும்.

விநாயகர் என்ற சொல்லிற்குத் தனக்கு மேல் ஒரு தலைவன் இல்லாதவன் என்பது பொருளாகும்.

கணங்களுக்குச் சிவபெருமான் தலைவராக இருக்க அருள் புரிந்தமையால் கணபதி என்ற பெயரும் இவருக்குண்டு.

விநாயகரை வழிபடும்போது வாழை, மா, பலா முதலிய கனி வகைகளையும் தேங்காய், கரும்பு, எள்ளுருண்டை, அவல், கடலை, மோதகம் முதலியவைகளை வைத்துப் படைப்பது வழக்கம்.

விநாயகருக்கு மிகவும் உகந்தது. அருகம்புல்லாகும். (சில தேவர்களுக்குச் சில மலர் கள் ஆகாது என்பது மரபு. அவ்வழியில் விநாயகருக்குத் துளசி ஆகாது.)

விநாயகரது உருவத்திலுள்ள நான்கு கரங்கள் தேவர் கூறும்; யானைத் தலை, தும் பிக்கை முதலியன விலங்கின் கூறும்; பேழை வயிறும், குறுகிய கால்களும், பூதக் கூறும் ஆதலாலும் ஒரு பக்கம் தந்தமின்மை பெண் கூறும் இடது பக்கம் தந்தமிருக்கும் பகுதி ஆண்கூறுமாதலாலும் முகம் அஃறிணைக் கூறும் ஏனைய உருப்புகள் உயர்திணைக்கூறு மாத லாலும், ஆண், பெண், உயர்திணை, அஃறிணை, தேவர், பூதர், விலங்கு என்று பலவாறு பிரித்துக் கூறும் பொருள்கள் எல்லாமாகவும் இருப்பவர் விநாயகரே என்பது விளங்கும்.

கயமுகாசுரன் என்னும் அசுரன் தேவர்களைத் துன்புறுத்தி அவன் முன் தோபபுக் கரணம் போடச் செய்தான். கயமுகாசுரனை விநாயகர் அழித்தபொழுது தேவர்கள் அதனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயகருக்குச் செய்து அவரை மகிழ்வித்தனர். அவரும் மகிழ்ந்து தன் முன்பு அவ்வாறு செய்வோரிடத்து மகிழ்ச்சியுறுவதாகவும் வரங்கொடுத்தார் என்று நூல்கள் கூறுகின்றன.

சீர்காழியில் இந்திரன் வைத்த மலர் வனத்திற்காக நீர்தரும் பொருட்டு, அகத்திய முனிவரது கமண்டலத்தில் இருந்த காவிரியை காக்கை வடிவங்கொண்டு விநாயகர் கவிழ்த்த காலத்தில் விநாயகரை அறியாது விரட்ட பின் உண்மையறிந்த அகத்தியர் தன் தலையில் தான் செய்த தவற்றைப் பொறுக்குமாறு விநாயகரை வேண்டித் தலையில் குட்டிக்கொண்டார். அதனால் மகிழ்ந்த விநாயகர் தன் முன் அவ்வாறு செய்பவர்களது பிழை பொறுத்து வேண்டிய வரங்களை அருளுவதாகவும் வரங்கொடுத்தார் என்று கந்தபுராணம் கூறுகிறது.

இவ்விரண்டு வழிபாடுகளும் விநாயகருக்கேயுரிய சிறப்பு வழிபாடாகும்.

விநாயகருக்கு உள்ள யானை முகம் அறிவையும் ஆற்றலையும் குறிக்கிறது. துதிக்கை எல்லா மந்திரங்களுக்கும் மூலதத்துவமாக விளங்கும். ''ஓம்'' எனும் பிரணவத்தின் ஒலிக்குரிய வடிவத்தையும் பேழை வயிறு, உலகம் அனைத்தையும் தன்னுள் அடக்கிக் கருணையுடன் காக்கும் தன்மையையும் குறிப்பதாகப் பொருள் கூறுவர்.

மேலும், பாசம் ஏந்திய கை படைத்தலையும் அங்குசம் ஏந்திய கை அழித்தலையும் ஒற்றைக்கொம்பு ஏந்திய கை காத்தலையும் துதிக்கை மறைத்தலையும், மோதகம் வைத்துள்ள கை அருளுதலையும் குறிப்பிட்டு பிரமன், விஷ்னு, ருத்திரன், மகேசுரன், சதாசிவன் ஆகிய மூர்த்திகளும் பிள்ளையாராகிய இவரே என்பர்.

விநாயகர் வடிவம் இடத்திற்கு இடம் மாறுபடுகிறது.

தமிழ் நாட்டில் பெரும்பாலும் ஒரே முகத்துடன் வழிபடுகின்றனர். ஆனால் பம்பாயில் இரண்டு முகங்களோடும், ஜப்பானில் மூன்று முகங்களோடும், சீனாவில் நான்கு முகங்களோடும், நேப்பாளத்தில் ஐந்து முகங்களோடும் அமைந்திருப்பவைகளை வழிப்படுகின்றனர்.

விநாயகரை வழிபட்டுப் பலர் பலவேறு பேறுகளை அடைந்துள்ளனர். சிறு குழந்தைகளும் அறிந்த ஔவைப் பாட்டியார் இவர்களிடம் முதலிடம் பெறுபவராவார்.

நாமும் அவரைப்போல எளிய முறையில் விநாயகரை வழிபட்டு எல்லாப் பேறுகளையும் பெறுவோமாக.

''கணபதி என்றிடக் கலங்கும் வல்வினைக்
கணபதி என்றிடக் காலனும் கைதொழும்
கணபதி என்றிடக் கருமம் ஆதலால்
கணபதி என்றிடக் கவலை தீருமே''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டி செல்வ விநாயகர் திருக்கோயில்
# குடமுழுக்கு விழா வாழ்த்து

கவியரசர் இளந்தேவன்
D 44, தாடண்டர் நகர்
சைதை
சென்னை 600015

தென்றலின் பிறந்த வீடு
திருமகள் வாழும் வீடு
குன்றங்கள் பச்சை யாடைக்
கோலத்தில் கொழிக்கும் வீடு

மன்றங்கள் தமிழைச் சிந்தும்
மரகதக் கண்டி தன்னைக்
கண்டவர் நெஞ்சுக் குள்ளே
காணுவார் முக்தி வீடு !

வீட்டிலே வீடு காணும்
வித்தகத் தமிழன், ஈழ
நாட்டிலே கோவில் கட்டி
நாட்டினான் புகழை ! அன்னோன்

காட்டிய வழியில் சென்று
கலைமணம் பரப்ப, நாட்டுக்
கோட்டையார் எழுந்தார் ! வண்ணக்
கோபுரம் எழுந்த தம்மா !

ஆதவன் வருமுன் தோன்றும்
அருணனின் பேரைக் கொண்ட
மாதவச் செல்வர் போற்ற
மக்களும் மகிழ்ந்து போற்ற

மோதகம் கையில் கொண்ட
மூலத்தின் மூலத் துக்கு
வேத நூல் வழியில் பூசை
வீரப்பர் செய்யக் கண்டோம் !

கண்டவர் நெஞ்சம் விம்மக்
கண்களில் கங்கை பொங்கத்
தண்டமிழ் இன்பப் பாடல்
தானாக இதழில் கொஞ்சக்

கண்டியின் இதயத் துக்குள்
கணபதி உள்ளார் ! கண்டும்
விண்டவர் உண்டா செல்வ
விநாயகன் விரிந்த கீர்த்தி !

கீர்த்தியில் பெரிய மூர்த்தி
சேவையில், கிருஷ்ண மூர்த்தி
ஆர்த்தெழும் அன்பால் இன்று
அமைந்தது குடமுழுக்கு !

மூர்த்திக்கு மூர்த்தி யான
முழுமுதல் மூர்த்தி, கந்தன்
கார்த்தடங் கண்ணி மீனாள்
கண்டிடக் கண்டி வாரீர் !

கண்டிடக் கண்டி வாரீர் !
கண்களால் தெய்வக் கோலம்
உண்டிடக் கண்டி வாரீர் !
உலகெலாம் தமிழைச் சொல்லி

வென்றிடக் கண்டி வாரீர் !
விநாயகன் அருளை நெஞ்சில்
மொண்டிடக் கண்டி வாரீர் !
மூவுல கும்பைப் போற்ற !

போற்றுங்கள் தெய்வக் கோவில்
புதுப்பிக்கும் புனிதர் தம்மை !
போற்றுங்கள் கொடைய ளித்த
புகழுடைச் செல்வர் தம்மை !

போற்றுங்கள் சைவ மேன்மை
போற்றிடும் மேலோர் தம்மை !
போற்றுங்கள் உண்மைத் தொண்டர்
புரிகின்ற பணிகள் தம்மை !

தம்முளே தெய்வம் தாங்கி
தண்ணருள் விழியில் தாங்கி
நம்முளே நாமாய் ஆன
நாதனாம் சாம்ப மூர்த்தி

செம்மைசேர் நாமம் செப்பத்
தெய்வமாய் ஆவோம் ! தீமை
வெம்மைசேர் நெஞ்சுக் குள்ளும்
வீசுமே தெய்வத் தென்றல் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயத்தின் பெருமைக்குக் காரணமானவர்கள்

கண்டி கட்டுக்கலை ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயம் அழகுமிளிர கவினுறு கலைக் கூடமாக விளங்குகிறது என்பது அனைவரதும் ஏகோபித்த அபிப்பிராயமாகும்.

இத்தகைய அழகுமிகு கோவிலை நிர்மாணித்துத் தந்தவர்களை நாம் இச் சந்தர்ப்பத்தில் நன்றியுடன் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.



**திரு. எம். கே. குருசாமி ஸ்தபதி**

ஆலய நிர்மாண வேலைகளைப் பொறுப்பேற்றுச் செய்து தந்தவர் தமிழ் நாடு திருச்சி மாவட்டம் திருவானைக் கோயிலைச் சேர்ந்த சிற்ப கலாரத்தினம் திரு. எம். கே. குருசாமி ஸ்தபதி அவர்கள் ஆவார்.

தமிழ் நாட்டிலும், மலேசிய, சிங்கப்பூர் நாடுகளிலும் அழகு மிக்க பல ஆலயங்களை அமைத்துக் கொடுத்த திரு. குருசாமி ஸ்தபதி அவர்கள், இலங்கையிலும், கொழும்பு, திருகோணமலை, தலைமன்னார், அட்டன், யாழ்ப்பாணம் முதலான இடங்களிலும் பல ஆலய வேலைகளைப் பூர்த்தி செய்துள்ளார்.

முத்துப்பேட்டை குப்புசாமி குருசாமி ஸ்தபதி என்னும் இவர் தமிழ்நாடு அரசின் அங்கிகாரமும், பதிவும் பெற்றவர். மதுரை ஸ்ரீ மீனாட்சி அம்மன் கோவில் திருப்பணி வேலைகள் நடைபெற்ற சமயத்தில் தமது குருநாதரான திரு. ரி. எஸ். மாரியப்ப ஸ்தபதி அவர்களுடன் இணைந்து செயலாற்றிய அனுபவம் தமது தொழிற் திறமையை வளர்த்துக்கொள்ள உதவியதாக அவர் பெருமைப்படுவார். அவரது வேலைகளைப் பார்க்கும்போது இந்தப் பெருமை நியாயமானதாகவே தெரியும். இதுபோல திருவானைக் கோவிலில் நடைப்பெற்ற திருப்பணி வேலைகளின் போது முந்நூறு பேரை வைத்து வேலை செய்ததும் சிறப்பான அனுபவங்களாகும். இவரது திறமையைப் பாராட்டி ஸ்ரீ ரங்கம் செல்லாயி அம்மன் கோவிலில் தமிழ் நாட்டில் தற்போது நிர்மாணிக்கப்பட்ட ஸ்ரீ ரங்கம் ராஜ கோபுரத்தை நிர்மாணித்த ஸ்தபதி திரு. சிவப்பிரகாசம் அவர்கள் முன்னிலையில் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் '**சிற்ப கலைத் திலகம்**' என்னும் பட்டம் வழங்கிக் கௌரவித்தார்.

கண்டி கட்டுக்கலை ஸ்ரீ செல்வ விநாயக ஆலயத்தை கலைக்கூடமாக மாற்றியமைத்த இவருக்கு ''**விஷ்வ கர்ம சிற்ப கலாஜோதி**'' எனும் கௌரவப் பட்டமும் வழங்கி கௌரவிக்கப் பட்டுள்ளார்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயத்தின் பெருமைக்கு

## காரணமானவர்கள்

[illegible]

[illegible]



[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு. ஜீ. மீனாட்சிசுந்தரம்

திரு. குருசாமி ஸ்தபதியின் மகனான இவர் தந்தையிடமே தொழில் பயின்று இன்று இளம்தலை முறையில் முன்னோடியான சிற்பக் கலைஞராக விளங்குகிறார். சுப்பிரமணியர் தேவஸ்தானத்தை சிவன் கோயிலில் கூடுதலான வர்ண வேலைகளை மேற்கொண்ட இவர் அட்டன் கோவிலில் பல சிற்பங்களையும் உருவாக்கியுள்ளார். குறிப்பாக மூலஸ்தான விமானத்திலுள்ள விநாயகர் விக்கிரகங்களும் மகா மண்டபத்திலுள்ள கஜலக்ஷ்மி செட்டும், வள்ளி, தெய்வானை சமேத சுப்பிரமணியரும் இவரின் கைவண்ணத்தில் உருவானவையே. தந்தையைப்போல இவரும் இத் தொழிலில் புகழ் பெறுவார் என்பதற்கு இவை சான்றுகளாக அமைகின்றன.

## திரு. வி. இராமலிங்கம்

ஸ்தபதியாரின் நெருக்கமான உறவினர் இவர். அவரிடமே தொழில் பயின்றவர். வர்ண வேலைகளிலும், சிற்பங்களிலும் தேர்ச்சி பெற்றவர். இலங்கையிலும், இந்தியாவிலும் இவரது கைவண்ணத்தில் பல ஆலயங்கள் அழகு பெற்றுள்ளன. மாணிக்கப்பிள்ளையார் கோவில் வசந்த மண்டப வர்ண வேலைகளும், வாசலிலுள்ள சாலைக் கோபுரத்திலுள்ள அழகுபடுத்தும் வேலைகள் யாவும் இவருடையவேயாகும். தொழில் ஆர்வமும், பக்தியும் கொண்ட இவர் எதிர்காலத்தில் புகழ் பெற்று விளங்குவார் என்பதிற் சந்தேகம் இல்லை.

## திரு. எஸ். செல்வராஜ்

நமது ஆலய வேலைகளைப் பூர்த்தி செய்ய வந்த கலைஞர் திரு. எஸ். செல்வராஜ் முசிரி மகாதேவி கிராமத்தைச் சேர்ந்த இவர் தாத்தையங்கார் பேட்டை சுந்தரம் ஸ்தபதியாரிடம் தொழில் பயின்றவர். தமிழ் நாட்டின் பல இடங்களிலும் வேலைகள் மேற்கொண்ட இவருக்கு இதுவே முதலாவது வெளிநாட்டுப் பயணமாகும். இவரும் இக்குழுவில் புகழ் பெற்ற கலைஞராக விளங்க வேண்டும் என்பதே நமது விருப்பமாகும். அந்த ஆர்வம் அவரிடம் உண்டு.

மற்றும் இங்குள்ள வேலைகளில் பங்கெடுத்துக் கொண்ட திரு. தங்கவேல், திரு. ராதா கிருஷ்ணன், திரு. பக்கிரிசாமி ஆகியோரும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

தமிழ் நாட்டில் இருந்து வருவிக்கப்பட்ட நோக்கத்தை இவர்கள் அனைவரும் சிறப்பாகவே நிறைவேற்றித் தந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு ச. அருணுசலம்

இவர் காளையார் கோவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட சுமார் முப்பது வருடங்களாக பலக் கோவில் களில் சிற்ப வேலைகள் செய்து, பல அனுபவங்களைப் பெற்றவராவார். இவர் 'விஸ்வகர்வசிற்ப கலா ஜோதி' திரு குருசாமி அவர்களிடம் சுமார் இருபது வருடங்க ளாக பணியாற்றி வருகின்றார்.



திரு. . ஆனந்தன்

இவர் திருச்சி மாவட்டம் அழகிய மணவாளத் தைப் பிறப்பிடமாகக் கொண்ட பதினெட்டு வயதே நிரம்பிய ஒரு இளம் ஓவியராவர். சுமார் மூன்று வருட அனுபவத்தை கொண்ட இவரின் கைவண்ணத்தை இங்குள்ள ஓவியங்களில் காணக் கூடியதாக இருக்கி ன்றது.

இச் சிற்பக் கலைக்குழுவைச் சார்ந்த அனைவரும் பெய ரும் புகழும் பெற்று பல்லாண்டு வாழ்வு வாழ கட்டுக் கலை ஸ்ரீ செல்வ விநாயகர் அருள் புரிய வேண்டுமென்று வாழ்த்துகின்றோம்.

தொகுப்பு,

வீ. பா. சு. மணியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்
நமசிவாய
வாழ்க

MRS. SOUNDRA KAILASAM
W/o. Justice P. S. KAILASAM
RETD JUDGE
SUPREME COURT OF INDIA

"MURUGANADI"
24, Kasturi Rangan Road,
Teynampet,
MADRAS - 600 018
Phone : 452527
07-09-1988

## நீடு வாழ்க

ஈழத்துக் கண்டியிலே இருந்த வண்ணம்
எல்லார்க்கும் கேட்டவரம் அளித்து நன்றாய்
வாழத்தான் செய்கின்ற பெருமை மிக்க
வள்ளலெனும் செல்வ விநாயகர்க்கிந் நாளில்
ஆழத்து நெஞ்சுக்குள் பக்தி சேர
அருமையுடன் குடமுழுக்குச் செய்கின்றார்கள் !
ஊழுக்கும் விதிசமைக்கும் கவராய் இந்த
உலகத்தில் இனிமேலே நன்மை ஓங்கும் !

இலங்கையிலே நல்லமைதி நிலவு தற்கும்
எழுகின்ற போருணர்ச்சி அடங்குதற்கும்
நலம்பெருக வளம்பெருக இலங்கை யாரும்
நம்மவரும் நன்றாக வாழ்வதற்கும்
தலங்களெலாம் ஆன்மிகம் தழைப்பதற்கும்
சங்கடங்கள் அத்தனையும் தீர்வதற்கும்
இலங்கு செல்வ விநாயகரின் அருளிருக்கும் !
என்றென்றும் பேரின்பம் பெருகி நிற்கும் !

நல்லறத்தைச் செய்வதற்கு நகரத்தார்கள்
நான்முந்தி நீ முந்தி எனச் சொல்வார்கள்
சொல்லரிய புகழுடைய அக்குலத்தில்
தோன்றியுள்ள வீரப்ப செட்டியாரின்
எல்லையிலா முயற்சியினால் இந் நன்னாளில்
இனிமையுறக் குடமுழுக்கு நிகழக் கண்டோம்
செல்வவிநாயகனருளால் குடமுழுக்கைச்
செய்கின்ற பெருமக்கள் நீடு வாழ்க ! நாதன்தாள் வாழ்க !

சௌந்தரா கைலாசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செல்வவிநாயகனே சரணம்

வி என்ற பொருளிற்கு மேலானவர் - நாயகர்
என்ற சொல்லிற்கு தலைவரானவர்
செல்வத்தில் அருள் பொழியும் - எம்
செல்வ விநாயகனே சரணம்:


ஓம் எனும் பிரணவத்தின் தத்துவம் - நீ
மலையகத் தலைநகர் கண்டியில் எழுந்தருளி
சீர்பெற்று சிறப்புடன் வாழும் எம்மை
காப்பாற்றும் கட்டுக்கலை செல்வவிநாயகனே சரணம்

முதற்குறி, முதற்பணி எது துவங்கும் போதும் - உன்
திருநாமம் தவறாது தொடரும் உன் மக்கள்
பாரெங்கும் ஆட்சி புரியும் யானை முகத்தோனே
உன் பாதம் போற்றிடுவோம் செல்வவிநாயகனே.

மாத்தளை விஜயகுமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மூலஸ்தான முகப்பின் புதிய தோற்றம்




இந்தியாவிலிருந்து வருகை தந்த சிற்ப ஓவியர்களின் கைவண்ணத்தின் பின் மூலஸ்தான மண்டபத்தின் காட்சி இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அண்மையில் நடைபெற்ற புனருத்தாரனத்தின் பின் தேவஸ்தான வசந்த மண்டப காட்சி.



கண்டி கட்டுக்கலை ஸ்ரீ செல்வவிநாயகர் தேவஸ்த்தான பங்குனி உத்தர திருவிழாவை முன்னிட்டு நடைபெறும் பஞ்ச இரதோற்சவத்தின்போது அருள்மிகு மீனாட்சி சமேத சுந்தரேஸ்வரர் சித்திரத்தேரில் வலம் வரும் காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஸ்ரீரங்க பெருமான் வீற்றிருக்கும் காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பஞ்ச இரதோற்சவத்தின்போது அருள்மிகு ஸ்ரீ செல்வவிநாயகர், வள்ளி தெய்வானை சமேத ஆறுமுகப்பெருமான் இரதத்திற்கு எழுந்தருளும் காட்சி



பங்குனி உத்தரதேர்திருவிழா காலங்களில் அடியார்களுக்கு அருள் பாலிக்கும் வண்ணம் பஞ்ச மூர்த்திகள் பக்தர்கள் சகிதம் வெளி வீதி வரும் காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விமான கோபுரத்தில் மீனாட்சியம்மன் தரும் காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கண்டி இந்து இளைஞர் மன்றம் நடாத்தும் மகாசிவராத்திரி விழா நிகழ்ச்சிகளை ஆரம்பித்து வைக்கும்முகமாக, ஆலய நிர்வாக இயக்குநர் திரு. G. கிருஷ்ணமூர்த்தியும் மன்ற தலைவர் வீ. பாலசுப்பிரமணியமும் குத்து விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கும் காட்சி.




வருடா வருடம் நடைபெறும் மகாசிவராத்திரி விழாவையொட்டி பெருந்திரளான பக்தர்கள் கூடும் காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இலங்கையின் இந்திய தூதுவர் திரு. டிக்ஷிட் ஆலயத்திற்கு
வருகை தரும்பொழுது, வரவேற்கும் காட்சி.



இலங்கையின் இந்திய உதவி தூதுவர் திரு. சர்மா ஆலயத்திற்கு
வருகை தந்து இறைவணக்கம் செலுத்தும் காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கௌரவ பிரதமர் திரு. ஆர். பிரேமதாஸ அவர்கள் கோவிலுக்கு வருகை தந்த பொழுது ஆலய நிர்வாக இயக்குநர் திரு. G. கிருஷ்ணமூர்த்தி வரவேற்ற பொழுது எடுக்கப்பட்ட படம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நகரில் சமாதானம் சாந்தி ஏற்படவேண்டி சர்மத தலைவர்கள் ஏற்பாடு செய்த மகாநாட்டினை ஆரம்பிக்குமுகமாக ஆலய நிர்வாக இயக்குநர் திரு. G கிருஷ்ணமூர்த்தி குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைக்கும் காட்சி.



நகரில் சாந்தியும் சமாதானமும் ஏற்பட கண்டி நகர், YMMA. YMCA, YMBA ஆகிய மன்றங்களின் தலைவர்கள், ஒருங்கிணைந்து ஆலய நிர்வாகி திரு. G. கிருஷ்ணமூர்த்தியோடு ஆலயத்திற்கு, வருகை தரும் காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நீதியமைச்சர், திரு. நிஸ்ஸங்க விஜயரத்ன கண்டி ஸ்ரீ தலதா மாளிகையின் தியவதன நிலமேவாக வருகை தந்தபொழுது, அவரை ஆலய நிர்வாக இயக்குநர் திரு. G. கிருஷ்ணமூர்த்தி வரவேற்கும் பொழுது எடுக்கப்பட்ட படம்.



கண்டி ஸ்ரீ தலதா மாளிகாவின் தியவதன நிலமே திரு. நிரஞ்சன் விஜயரத்னவை, தேவஸ்தான நிர்வாக இயக்குநர் திரு. G. கிருஷ்ணமூர்த்தி வரவேற்கும் காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கண்டி வாழ் இந்துப் பெருங்குடி மக்கள், இந்து, பௌத்தம் இணைவு, ஒற்றுமை என்பன ஏற்படும் முகமாக, சம்பிரதாயப்படி கண்டி ஸ்ரீ தலதா மாளிகைக்கு, ஆலய நிர்வாகி திரு. G. கிருஷ்ணமூர்த்தி தலைமையில் சென்று வழிபடும் காட்சி



கண்டி ஸ்ரீ தலதா மாளிகை புனித தந்தம் வெளிவீதி
வரும் முன் தேவஸ்தான குருக்களால் ஆராதனை செய்யப்படும் காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் பரத்துவம்

( நா. முத்தையா )

தனக்கு மேலாக ஒரு தலைவர் இல்லாமையினால் விநாயகர் என்ற பெயரையும் தன்னை நினைந்து வழிபடுவோரின் விக்கினங்களைப் போக்குபவர் ஆனமையினால் விக்னேஸ்வரர் என்ற பெயரையும், கணங்களுக்குத் தலைவர் ஆனமையினால் கணபதி என்ற பெயரையும் பெற்றவர்.

முதலில் பிறந்த ஒலி 'ஓம்' என்பதாகும். அ, உ, ம் என்ற மூன்று ஒலியும் சேர்ந்ததே 'ஓம்' என்பதாகும். இந்த 'ஓம்' என்ற ஒலியிலிருந்தே மற்றவையெல்லாம் பிறந்தன. 'அ' என்பது அறிவையும், 'உ' என்பது உண்மையையும், 'ம்' என்பது ஞானத்தினால் உண்மைப் பொருளை அறியும்போது உண்டாகும் பேரின்பத்தையும் உணர்த்துவதாகும்.

'ஓம்' என்பது பிரணவப் பொருள். 'பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்' என்று புலவர் ஒருவர் பாடியுள்ளார். பிரமதேவர் வேதங்களைப் படைத்தவராயிருந்தும் 'ஓம்' என்பதற்குப் பொருள் தெரியாமையினால் முருகப்பெருமானிடம் குட்டு வாங்கினார். அதே முருகன் 'ஓம்' என்பதன் பொருளைச் சிவபெருமானுக்கு விளக்கி 'குருபரன்' என்ற பெயரைப் பெற்றார்.

நாம் கடிதம் எழுதும்போது முதலில் பிள்ளையார் சுழி இட்டே அதன்பின் 'சிவமயம்' என்பதனைப் போடுகின்றோம். எல்லாக் கோவில்களிலும் விநாயகருக்கே முதல் பூஜை. வேறு தெய்வங்கள் இல்லாத கோவிள்கல் உண்டு. ஆனால் விநாயகர் இல்லாத கோவிலே இல்லை என்று கூறலாம். நாடெங்கும் பிள்ளையார் முதல் காட்சி அளிக்கின்றார். பிள்ளையார் கோவில் இல்லாத ஊர் நம் நாட்டில் இல்லை. அரச மரத்தடி, ஆலமரத்தடி, குளக்கரை ஆகிய எந்த இடத்திலும் பிள்ளையாரைக் காணலாம். பிள்ளையாருக்கு முன்னால் தலையில் குட்டிக்கொண்டு தோப்புக் கரணம் போட்டால் எடுத்த காரியம் சித்திக்கும் என்பது எமது அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

சிரமமும் செலவும் குறைந்த பூஜை பிள்ளையார் பூஜையாகும். பொருள் வசதியில்லாதவர்கள் பிள்ளையார் பூஜையுடனேயே தமது கருமத்தை இலகுவில் முடித்து கொள்ளுவர். தேங்காய் ஒன்றை உடைத்து விட்டாலே விநாயகப் பெருமான் திருப்திபட்டு விடுவார். சாணி உருண்டையிலோ, மஞ்சள் உருண்டையிலோ மூன்று அறுகம் புல்லை வைத்துவிட்டால் அங்கு விநாயகப் பெருமான் எழுந்தருளி விடுவார். சாணமும், மஞ்சளும் கிருமிக்கொல்லிகள் என்பது சிந்திக்கப்படவேண்டிய விஷயமாகும்.

கணபதி ஓங்கார வடிவம். யானையே 'ஓம்' என்று தெளிவாகப் பிளிரும். யானை கம்பீரமான தோற்றமும் அயரா உழைப்பும் திடபலமும் அறிவும் கொண்டது. கணபதி உருவைக் கவனியுங்கள். கால் மடித்து அமர்ந்த கோலம் அகரம் போலும், வயிறு மகரம் போலும், தலையும் துதிக்கையும் உகரம் போலும் அகர, உகர, மகர, ஓங்கார வடிவம் கணபதி வடிவமானது. குண்டலி சக்தியே மூஷிகம். பாசத்தை அறுக்கும் பாசாங்குசமும், பதியறிவைத் துலக்கும் கொம்பெழுத்தாணியும் ஏழுலகும் ஈஸ்வர சக்தியில் அடக்கம் என்பதற்காக மோதகமும் ஈஸ்வர சக்தியை உபாசிக்கும் மந்திர ஜப சாதனையைக் காட்ட ஜப மாலையும் கணபதி கையிற்காண்கின்றோம்.

விநாயகப் பெருமானுக்கு ஐந்து திருக்கரங்கள். ஒரு கையில் மோதகம் ஏந்தியிருக்கிறார். அது தனக்காக. இன்னொரு கையில் கொம்பை முறித்து வைத்திருக்கிறார். அதனைத் தேவர்களுக்காக வைத்திருக்கிறார். துதிக்கையில் இரத்தினக் கலசம் வைத்திருக்கிறார். அதனைத் தந்தை தாயாருக்குப் பாதபூஜை செய்வதற்காக வைத்திருக்கிறார். மற்றைய இரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரங்களிலும் அங்குசமும் பாசமும் வைத்திருக்கிறுர். ஆணவமாகிய யானையைப் பாசத்தாற் கட்டி அங்குசத்தினுல் அடக்குவதற்காக வைத்திருக்கிறுர். ஆன்மாக்களாகிய எமக்காக அவர் இரு கரங்களை வைத்திருப்பது அவருக்கு எம் மீது இருக்கும் கருணையை விளக்குகின்றது.

சிவபெருமான் முப்புரங்களையும் எரிக்கப் புறப்பட்டபோது விநாயகரை நினையாது சென்றமையால் அவர் சென்ற தேரின் அச்சு உடைந்ததாகக் கூறப்படுகின்றது. முருகப் பெருமான் வள்ளியைத் திருமணம் செய்வதற்கு யானையாக வந்து உதவினுர். ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் சக்கராயுதத்தை விநாகயப் பெருமான் எடுத்து மறைத்தபோது விஷ்வக் சேனர் விகடக் கூத்தாடி விநாயகப் பெருமானை மகிழ்வித்து சக்கராயுதத்தைத் திரும்பவும் பெற்று கிருஷ்ண பரமாத்மாவுக்கு அளித்தார்.

ஆவணிச் சதுர்த்தியன்று கணபதி வழிபாடு நாடெங்கிலும் நடைபெறுகிறது. அன்றைய தினம் தஞ்சாவூரைச் சேர்ந்த ஒரு ஊரில் மக்கள் ஒவ்வொருவரும் தத்தம் வீடுகளில் பூஜை செய்வதில்லை. எல்லோரும் கோவிலுக்கு வந்து ஒன்றுகூடிப் பூஜை செய்வர். அன்றைய தினம் அவர்கள் எல்லோரும் பழைய பகைமையை மறந்து கோவிலில் உறவுகொள்வர். இச் செயல் இன்றும் நடைபெற்று வருகிறது.

'ஓம் கணபதி' என்ற மந்திரத்தை காலை மாலை ஜெபம் செய்து வந்தால் இஷ்ட சித்திகள் கிடைக்கும். அருணகிரியாருக்கு, முருகப் பெருமானுக்கு ஞான மாலை ஒன்று சாத்த வேண்டுமென்று நீண்ட நாட்களாக ஆசை அந்த ஆசையை நிறைவேற்றி வைக்குமாறு விநாயகப் பெருமானிடம் பின்வருமாறு வேண்டுதல் செய்கின்றுர்.

''செஞ்சொற் புனைமாலை சிறந்திடவே
பஞ்சக்கரவானை பதம் பணிவாம்''

முக்கண்ணும், ஐங்கரமும், ஒரு கொம்பும், பானை வயிறும் அவர் முழுமுதற் பொருளென்னும் தத்துவத்தை விளக்கும். ஐந்து கரங்களும் படைத்தல் முதலிய பஞ்ச கிருத்தியங்களை உணர்த்தும். அவர் முக்கண் உடைமையால் தேவரோ எனில் தேவருமல்லர். யானைமுக முடைமையால் விலங்கோ எனில் விலங்குமல்லர். பானை வயிறுடையவராதலால் பூதரோ எனில் பூதருமல்லர். வேறு என்னவோ எனில் அவர் உலக சராசரங்களுமாய் அவற்றுக்கப் பாலுமாய் மனம் வாக்குக்கு எட்டாப் பரம்பொருளே. இந்த உண்மையையே விநாயகப் பெருமானின் திருஉரு விளக்குகிறது.

விநாயகப் பெருமானை வழிபட்டுப் பயனடைந்தோர் பலர். நம்பியாண்டார் நம்பி வழிபட்டு அருள் பெற்றுர். அதன் பயனுகத் திருமுறைகளை வகுத்துத் தந்தார். கைலைத் திருமணங்காண விரும்பிய ஒளவையை அங்கு சேர்த்து அக்காட்சியைக் கண்டு இன்புற வைத்தார் ஒரு சமயம் திருமால் உமையம்மையாள் சபிக்கப்பட்டு குருட்டு பாம்பாகினுர். அச்சாபம் நீங்கும் பொருட்டு விநாயகப் பெருமானைக் குறித்து வழிபட்டார். வழிபட்ட திருமாலுக்குக் காட்சி கொடுத்து அக்குருட்டுத் தன்மையை நீக்கினுர். கஜமுக அசுரனைச் சங்கரித்து தேவர்கட்கு அருள் செய்தார்.

இலக்கண சுந்தரி என்பாள் விரத நெறி பிழைத்த குற்றத்தினுல் அல்லல் உற்றுள். கணவனைப் பிரிந்தும், வீடுதோறும் அலைந்தும் துர்நிமித்தங்கள் தோன்றியும் துரத்தப்பட்டும் வருந்தினள். மீண்டும் விநாயகர் அருளினுல் விரதம் அநுட்டித்து அருட்பொலிவுடன் வாழ்ந்தமையைப் பிள்ளையார் கதை என்னும் பிரபந்தம் நன்கு உணர்த்தும்.


சுபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தின் பெருமை

இந்த உலகமானது ஐம்பூதங்களால் உண்டாக்கப்பட்டது. அவை மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாசம் ஆகியன, ஒவ்வொரு உடம்பிலும் அறிவை வளர்க்கும் உறுப்புக்கள் ஐந்து உள்ளன. அவை கண். காது மூக்கு, நாக்கு, உடம்பு.

ஐந்து முகம் கொண்ட சிவபெருமான், நேபாளம், காசி, காளஹஸ்தி, திருவானைக் காவல், சித்தேச்வர் மகாதேவ் (மத்ய பிரதேசம்) ஆகிய ஸ்தலங்களில் அருள் பாலிக்கிறார். பஞ்ச பூத க்ஷேத்திரங்கள் என்று சிறப்பாகச் சொல்லப் படுகின்றன. அவை காஞ்சீபுரம், திருவானைக்காவல், திருவண்ணாமலை, ஸ்ரீ காளஹஸ்தி, சிதம்பரம் ஆகும் தமிழ் நாட்டில் நடராஜருக்கு ஐந்து சபைகள் உள்ளன. கனகசபை – சிதம்பரம்; ரஜத சபை – துரை; தாம்ர சபை – திருநெல்வேலி; ரத்ன சபை – திருவாலங்காடு; சித்திர சபை – திருக்குற்றாலம்.



"கட்டுக்கலை ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலயம்"

பழங்காலம் தொட்டு வீடுகளில் பஞ்சாயதன பூஜை என்று கடவுள் வழிபாடு செய்யப்பட்டு வருகிறது. இதில் கணபதி, பரமேஸ்வரன், பார்வதி, விஷ்ணு, ஆதித்தியன் – இவர்கள் பூஜிக்கப்படுகின்றனர். அபிஷேகத்தில் பஞ்சாம்ருத அபிஷேகம் மிக முக்கியமானது. பழம், தேன், சர்க்கரை, நெய், பால்.

பழங்காலத்தில் பஞ்சாக்கினி தபஸ் என்பது பிரசித்தம். இது நான்கு பக்கங்களிலும் 4 அக்னியை வளர்த்துக் கொண்டு, மத்தியில் சூரியனை அக்கினியாகக்கொண்டு தபஸ் செய்வதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவில்களில் பஞ்ச மூர்த்தி புறப்பாடு என்பது விஷேமானது. (விநயகர், ஸுப்ர மணியர், பரமசிவன் பார்வதி, சண்டிகேஸ்வரர்) கோவில்களிலும் வீடுகளிலும் பூஜை செய் வதற்கு 'பஞ்ச பர்வாக்கள்' என்று விசேஷ நாட்கள் சொல்லப்படுகின்றன. (அமாவாசை, பௌர்ணமி, 2 அஷ்டமி, மாதப் பிறப்பு) பஞ்ச ஸம்ஸ்காரம் என்று வைஷ்ணவத்தில் சொல்லப்படுகிறது. (நாமம் தரித்தல், சக்கரதாரணம், த்வய மந்திரம். அஷ்டாக்ஷரம், சரணுகதி) பாஞ்சராத்ரம் என்பது ஒரு முறை. 5 ராத்திரியில் விஷ்ணு பூஜை செய்வதற்கு வேண்டிய ஸம்ஹிதைகளைப் பெருமாளே உபதேசித்ததாக உண்டு.

திதி, வார, நக்ஷத்திரயோக, கரணங்களைக் கூறுவது பஞ்சாங்கம். 'பஞ்ச மஹா யக்ஞம்' என்று விசேஷமாகக் கூறப்பட்டுள்ளது. அவை (1) தேவயக்ஞம் – ஸமித்தால் அக்னியில் ஹோமம் செய்வது; (2) பித்ரு யக்ஞம் – பித்ரு காரியங்களைச் செய்தல்; (3) பூத யக்ஞம் – பிராணிகளுக்கு உணவளித்தல்; (4) மனுஷ யக்ஞம் – விருதோம்பல்; (5) ப்ரும்ம யக்ஞம் - தினமும் வேதத்தை ஒதுதல் என்பவை ஆகும்.

யோக லிங்கம், போக லிங்கம், வரலிங்கம்' மோக்ஷ லிங்கம். முக்தி லிங்கம் என்பவை பஞ்ச லிங்கங்கள். பஞ்ச பாண்டவர்கள்; தர்மர், பீமர், அர்ச்சுனர், நகுலர், ஸஹாதேவர் ஆகியவர்கள். அகல்யா, த்ரௌபதி, சீதா, தாரா, மண்டோதரி, இவர்கள் பஞ்ச கன் யாக்கள்.

விநாயகப் பெருமானுக்கு 'ஐந்து கரத்தான்' என்று பெயர். மற்ற தேவதைகளைப் போல 4 கைகளும், துதிக்கையும் சேர்ந்து ஐந்து கைகள்.

எல்லாவற்றுக்கும் மேலாக ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் பஞ்சாக்ஷர ஜபம் செய்ய வேண்டியது மிக முக்கியமானது. மாணிக்க வாசக ஸ்வாமி, சிவபுராணத்தில், 'நமச்சி வாயவாழ்க' என்று சொல்லித் தொடங்குகிறுர். அப்பர் பெருமான் ''நற்றுணையாவது நமசி வாயவே'' என்று பாடுகிறுர் ஐந் தெழுத்தின் பெருமை எண்ணில் அடங்காதது. ஆகவே ஒவ்வொருவரும் பஞ்சாக்ஷரம் ஜபித்து, சிவபெருமானின் அருளைப் பெற்று உய்வோமாக.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு
ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சங்கராசாரிய சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையார் பெருமை

சந்திரிகா சோமசுந்தரம்

தனிப்பெரும் கடவுளான விநாயகப் பெருமான் ஓங்கார வடிவமானவன். எந்த ஒரு காரியத்தையும் தொடங்கும் முன் பிள்ளையாரை வணங்கியே நாம் தொடங்குவது என்பது இந்து மரபாகும். எண்ணியதை எண்ணியவாறு திண்ணிய முறையில் முடிக்கும் வல்லமை தருபவன் கணபதி.

வி - என்றால் சிறப்பு. நாயகன் என்றால் தலைவன். விநாயகன் என்றால் சிறந்த தலைவன். சிறப்புக்கெல்லாம் தலைவன் எனவும் பொருள்படும். தனக்கு ஒரு நாயகன் இல்லாதவன், அதாவது தன்னை நடத்துவர் ஒருவர் எவருமில்லாமல் தாம் அனைத்தையும் நடத்துவிக்கும் தன்மை பொருந்தியவர் எனவும் பொருள்படும். இதே பெயருக்கு இன்னொரு பெயரும் உண்டு. வி என்பது மேலான எனப்பொருள் பட மேலான நாயகன் – விண்ணவர்க்கும் மேலான நாயகன் எனவும் கூறலாம்.

இப்படி எல்லோருக்கும் தலைவனாய் எல்லோரையும் நடத்தும் முழுமுதற் கடவுளின் தன்மை அருட்குணம் சுதந்திரம் என சொல்லப்படுகிறது. தன்வயம் உடமை எனப் பொருள்படும். இது சிவனின் எண் குணங்களான தன்வயத்தனுதல், தூய உடம்பினனுதல் இயற்கை உணர்வினனுதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே யாசகங்களின் நின்று நீங்குதல், வரம்பிலின்பமுடமை, முடிவிலற்றலுடைமை, பேராருளுடைமை ஆகியவற்றால் முதல் குணமாகும். மற்ற ஏழு குணங்களும் விநாயகனிடம் உறைகின்றன என்பது விநாயகப் புராணத்தால் அறியக்கிடக்கிறது.

''நாத முடியில் வீற்றிருக்கும் நாதன் எவன்;
எண் குணன் எவன் அபி
யோத முதலைக் கணபதியைப் புகழ்ந்து
சரணம் அடைகின்றோம்''

எனும் பாடல் பிள்ளையாரின் எண்குணங்களைக் குறிப்பிடுகின்றது.

ஈசன் அனைத்தையும் ஆள்பவன். அதுபோல ஈஸ்வரத்தன்மை பொருந்திய கணேசன் கணங்களை ஆளும் ஈசன் என அழைக்கப்படுகிறன். விநாயகன் ஒரு கொம்பு. இரு செவிகள் மூன்று திருக்கண்கள், நான்கு திருத்தோள்கள், ஐந்து திருக்கரங்கள், ஆறெழுத்து உடையவர்.

சிவனைப்போல இவரும் ஐந்தொழிலை ஆற்றுகிறார் எனப்படுகிறது. கும்பம் ஏந்திய கரம் படைத்தலையும், மோதககரம் காத்தலையும், அங்குச கரம் அழித்தலையும், பாசம் தாங்கும் கரம் மறைத்தலையும், தந்தம் ஏந்திய கரம் அருளலையும் ஆற்றுகின்றன. எனவே விநாயகர் முழுமுதற் கடவுளுக்கு இணையானவர் எனப்படுகிறார். விநாயகரின் உருவமும் இதையே உணர்த்தி நிற்கிறது. வெட்ட வெளியினில் ஓம் கார நாதத்திலிருந்தே உலகம் உண்டானதென்பதே சைவடிகளின் நம்பிக்கை. விநாயகனின் வடிவம் ஓம்காரமாக அமைந்திருப்பதனால் உலக உற்பத்தியின் மூலம் இவனே எனக் கருதப்படுகிறன்.

விநாயகனின் உருவத்தில் முகம் ஓம்கார வடிவை உணர்த்தி நிற்கிறது. நான்கு கரங்கள் வானவர் இயல்பையும், மத்தள வயிறும், குறுகிய கால்களும், பூத இயல்பையும், கொம்பின்றி இருப்பது பெண் இயல்பையும், கொம்புடன் கூடிய பகுதி ஆண் இயல்பையும் குறிப்பிடுகின்றன. தலைக்கு மேல் அஃறிணையான விலங்கு இயல்பையும், உடல் உயர்திணையான மனித இயல்பையும் காட்டி நிற்கின்றன. உலகமெங்கும் நீக்கமற நிற்கும் திருவுரு இவனுரு என அறியமுடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயகப் பெருமானுக்கு விக்னேஸ்வரன் எனும் திருநாமமும் வழங்கப் பெறுகிறது. விக்னம் இடையூறுகளைக் களைந்து வழிகாட்டுபவன் இவனே. அதனால்தான் இவனைத் தொழுது செயல்களைத் தொடங்குகிறோம்.

பிள்ளையார் பிறந்த கதையே விசித்திரமானது. சிவன் இல்லாத சமயத்தில் பார்வதி நீராட விரும்பினாள். காவலுக்காக கையிலிருந்த மஞ்சள் பொடியில் கட்டை விரல், ஆட்காட்டி விரல், நடுவிரல் மூன்றினாலும் பிள்ளையார் பிடித்தாள் அம்மை. உருளான உருவில் ''ஓம்'' என்ற ஓங்கார வடிவம் ஒலித்தது. அன்னை நீராடினாள். இடையில் அய்யன் வந்தான். பிரணவன் தடுத்தான். அய்யன் தலையை கொய்தான். அன்னை ஆங்காரித்தாள். கிள்ளியெறிந்த தலை யானை முகமாக வளர்ந்து உடலோடு ஒட்டியது.

ஆதிசங்கரர் அமைத்து தந்த ஆறுமதங்களான காணபத்யம், சைவம், சாக்தம், வைணவம், கௌமாரம், சௌரம் ஆகியவற்றில் கணபதியை முழுமுதற் கடவுளாக வணங்கும் காணபத்யம் அடகுவது சிறப்பாகும். எல்லோராலும், எந்த இடத்திலும், எந்த நேரத்திலும் வணங்கப்படுபவர் விநாயகர். பிள்ளையார் கல்லில் மட்டுமன்றி மஞ்சள், வெல்லம், மாவு, சானம் போன்றவற்றிலும் பிடித்து ஆரோகணம் செய்து வணங்களாம்.

வெள்ளெருக்கம் பிள்ளையார் விசேஷமானவர் வெள் எருக்கம் மரத்தின் வேரில் சில இயல்பாகவே பிள்ளையார் வடிவில் அமைந்து விடுகின்றன. இவற்றை தோண்டி கவனமாக எடுத்து பூஜை செய்து வர நினைத்த பலன் கிட்டும் எனப்படுகிறது. விசேடமான இந்த வெள்ளெருக்கம் பிள்ளையடிகள் இப்போது இந்தியாவில் விற்பனைக்குள்ளது.

விநாயகனின் வடிவங்கள் பலவிதமானவை. குழந்தை வடிவினன் பால கணபதி, வாலிப பிள்ளையார் தருண கணபதி. சித்தி, புத்தி ஆகிய இரு சக்திகளை இணைந்து நிற்பவன் சக்தி கணபதி எனவும், நின்ற நிலையில் பிரசன்ன கணபதி எனவும், நடனமாடுபவன் நர்த்தனகணபதி எனவும் அழைக்கப்படுவான். சிவத்தின் மீது நேரம்ப கணபதியாகவும், பத்து கைகளுடன் மகாகணபதியாகவும் வணங்கப்படுகிறான்.


இப்படி பல்வேறு உருவங்களில் பக்தர் குறைத்தீர்க்க தரிசனம் தரும் பிள்ளையாரை இந்துக்கள் மட்டுமன்றி சாக்கியர்களும், சமணர்களும் வணங்கி வருகின்றனர். நம் நாட்டில் சிங்கள பௌத்த மத மக்கள் 'கண தெய்யோ' என்று நம்பிக்கையோடு வழிபடுகின்றனர்.

முற்காலத்தில் விநாயக வடிவம் இரண்டு கரங்களுடன் உட்கார்ந்த அல்லது நின்ற நிலையில் காணப்பட்டுள்ளது. தும்பிக்கை வலப்புறமாகவும், மார்பில் முப்புரிநூல் இன்றி வயிற்றில் நாகம் சுற்றிப்புரள இருக்கும். மோதகம் மற்றும் பாசம், அங்குசம், தந்தம் ஆகிய ஆயுதங்கள் தாங்கியிருப்பான் விநாயகன். மோதகம் வாழ்க்கையையும், பாசம் உலகப் பற்றையும், அங்குசம் அறிவையும் குறிப்பிடுகின்றன.


விநாயகப் பெருமானின் தும்பிக்கை வலப்புறம் சுழித்திருந்தால் வலம்புரி விநாயகரெனவும், இடப்புறமாக இருந்தால் இடச்சுழி விநாயகரெனவும் அழைக்கப்படுவார்.

இத்தகைய சிறப்புகள் மிகுந்த விநாயகப் பெருமான் இன்னல் களைந்து இன்பம் அளிப்பவர். புவனத்தின் தோன்றுமுகமாய் இருந்தும் பூவுலகமெங்கும், வியாபித்தும் நிற்கும் பிள்ளையார் பெருமையே பெருமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இலங்கையின் உயர் நீதியரசரும், தற்போது மேல் மகாணசபையின் ஆளுநருமான திரு. சர்வானந்தா ஆலயத்திற்கு வருகை தந்த பொழுது வரவேற்க்கப்படும் காட்சி.



கண்டி நண்பர்கள் நட்புறவு சங்க தலைவரிடம் ஆலய நிர்வாக இயக்குநர் திரு. G. கிருஷ்ணமூர்த்தி காசோலை ஒன்றினை அன்பளிக்கும் காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இலங்கையின் கௌரவ பிரதமர் திரு. R. பிரேமதாஸ, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நிதிச்செயலாளர் திரு. அண்ணாமலை ஆகியோர் ஆலயத்தில் இறைவணக்கம் செலுத்தும் காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது இதயங்கனிந்த நன்றிகள்



1 கண்டி கட்டுக்கலே ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயத்தின் அழகு தோற்றத்திற்கு மூல காரணமாக விளங்கிய சிற்பிகள், ஓவியர்கள், தொழிலாளர்கள் அனைவருக்கும்.

2 ஆலயத்தின் வளர்ச்சிக்கு அவ்வப்போது தேவையான பொருட்களையும் ஒத்துழைப்பையும் வழங்கிய இந்து பெருமக்களுக்கும்.

3 மகா கும்பாபிஷேகம் சிறப்புப் பெற பணியாற்றிய சிவாச்சாரியார்கள் மற்றும் உதவி யாளர்களுக்கும்.

4 வீரகேசரியில் சிறப்பு மலர் வெளிவருவதற்கு உதவிய பெரியார்களுக்கும்.

5 ஆலய திருப்பணிகள் செம்மையாக நடைபெற பொருளுதவி கேட்டு சென்றபோது மலர்ந்த முகத்துடன் வரவேற்று பொருளுதவி அளித்து ஆக்கமும் ஊக்கமும் கொடுத்த இந்து மக்கள் அனைவருக்கும்.

6 ஆலய திருப்பணி செம்மையாக நடைபெற எல்லா வழிகளிலும் ஆக்கமும், ஊக்கமும் அளித்து, இம்மலர் வெளிவர உதவிய இந்து இளைஞர் மன்றத்தினருக்கும், அதன் தலைவர் திரு. ப. பாலசுப்பிரமணியத்திற்கும், இச் சிறப்பு மலரை குறுகிய காலத்தில் வெகு சிறப்பாக அச்சிட்டு கொடுத்த நந்தன் அச்சகத்தினருக்கும் அதன் ஊழியர் களுக்கும்.

நன்றி கூற மறந்து விட்ட அனைவருக்கும் ஒட்டு மொத்தமாக நன்றிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Our Best Wishes to

## Sri Selva Vinayagar Temple's

## Maha Kumbabishekam

Nandhan Printers

Kandy.

Printed at Nandhan Printers – 8, Kotugodalle Vidiya, Kandy

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org